Registered as Newspaper

# உதயன் சஞ்சிவி

சுடர் : 36
கதிர் : 171 | ஞாயிற்றுக்கிழமை | வைகாசி 02 ஆம் நாள்
16 மே 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்:14+16 | செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

## அறிகுறியற்ற தொற்றாளர்கள் வீடுகளிலேயே கண்காணிப்பு!

மருத்துவத்துறையின் கோரிக்கைக்கு பணிந்து வந்தது அரசு

கொழும்பு, மே 16

அறிகுறிகளற்ற கொரோனாத் தொற்றாளர்கள் அவர்களது வீடுகளில் வைத்தே கண்காணிக்கப்படவுள்ளனர். இவ்வாறு ஆரம்ப சுகாதார பராமரிப்பு, தொற்றுநோயியல் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார். 02 ➤

## அடுத்த இரு வாரத்துக்கு முழுநேர பயணத்தடை?

### முடிவு இன்று என்கிறார் இராணுவத் தளபதி

கொழும்பு, மே 16

தற்போதைய முழுநேர பயணத்தடையை தொடர்ந்து இரு வாரங்களுக்கு விதித்து, நாட்டைத் தொடர்ந்து முடக்குமாறு எம்மிடம் கோரிக்கைகள் விடுக்கப்படுகின்றன. இந்தக் கோரிக்கைகள் தொடர்பில் இன்றுதான் முடிவு எடுக்கப்படும் இவ்வாறு இராணுவத் தளபதியும் கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவருமான சவேந்திர சில்வா தெரிவித்தார். 02 ➤



## சிகிச்சை நிலையங்களில் பெரும் இடப் பற்றாக்குறை

வீடுகளில் கண்காணிக்க இதுவே காரணம் என்கிறார் சவேந்திர

கொழும்பு. மே 16

நாட்டில் தற்போது நாள்தோறும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு 02 ➤

## 62 பேருக்கு வடக்கில் கொரோனா!

யாழ்ப்பாணம், மே 16

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 36 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 61 பேருக்கு கொரோனாத் தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று வட 02 ➤

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

## பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்தது யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம்

யாழ்ப்பாணம், மே 16

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்குத் தடை விதிக்கக்கோரி கோப்பாய் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தை யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் நிராகரித்தார்.

சம்பவம் இடம்பெறப்போவதைத் தடுக்கக்கோரும் 'ஏ' அறிக்கையை தாக்கல் செய்யாது. சட்டம் மீறப்பட்டது எனக் கண்டறியப்பட்டால் 'பி' அறிக்கையில் தாக்கல் செய்யுமாறு யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.பீற்றர் 02 ➤

## யாழ்ப்பாணத்தில் தொற்றுக்குள்ளான கர்ப்பிணிக்கு இரட்டைக் குழந்தைகள்

அனைவரும் நலம்

யாழ்ப்பாணம், மே 16

யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளான கர்ப்பிணி பெண்ணொருவர் இரட்டைக் குழந்தைகளை பிரசவித்தார். தாயும் சேய்களும் நலமடைந்து தற்போது வீடு திரும்பியுள்ளனர்.

கடந்த வாரம் பிரசவம் இடம்பெற்றது. நேற்று முன்தினம் தாயும், சேய்களும் வீடு சென்றனர். கொரோனாத் தொற்றுக்குள்ளான 02 ➤

## யாழ். போதனா மருத்துவமனை கொரோனா விடுதியில் 29 பேர்

அவசர சிகிச்சைப் பிரிவில் மூவர்

யாழ்ப்பாணம், மே 16

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இரண்டு தினங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கொரோனா விடுதியில் 29 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். அதனை விட 3 பேர் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று யாழ்ப் 02 ➤

## பி.சி.ஆர். இயந்திரத்தில் தொழில்நுட்பக் கோளாறு

முடிவுகள் தாமதம்

யாழ்ப்பாணம், மே 16

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பி.சி.ஆர். இயந்திரத்தில் நேற்றுமுன்தினம் திடீரென தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பரிசோதனை முடிவுகளில் 02 ➤

## முள்ளிவாய்க்கால் தூபி இடிப்புக்கு கனேடியத் தூதுவர் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், மே 16

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் இருந்த நினைவுத்தூபி சேதமாக்கப்பட்டமை தொடர்பில் இலங்கைக்கான கனேடிய தூதுவர் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

அவர் தனது ருவிட்டர் பக்கத்தில், இது இலங்கையில், புரிதலையும் நல்லிணக்கத்தையும் எவ்வாறு மேம்படுத்துகிறது என்பதைப் பார்ப்பது கடினமானது' என்று பதிவிட்டுள்ளார். (ஒ.இ)







மக்கள் ... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்த...

அவர் மேலும் தெரிவிக்கையில்:
நீண்ட நாள் விடுமுறை என்ற காரணத்தால் மக்களின் வெளி நடமாட்டத்தை முடக்கும் வகையில் மூன்று நாள்களுக்கு நாடு தழுவிய ரீதியில் முழுநேரப் பயணத் தடையை நடைமுறைப்படுத்தினோம். கொரோனாத் தொற்றின் தீவிரத்தையடுத்தே மேற்படி தீர்மானத்தை எடுத்திருந்தோம். நாளை அதிகாலை 4 மணி வரை இந்த முழுநேரப் பயணத்தடை நடைமுறையிலிருக்கும். இதையடுத்து நாளை முதல் எதிர்வரும் 31ஆம் திகதி வரை இரவு 11 மணி முதல் அதிகாலை 4 மணிவரையிலான பயணத் தடை நாடு தழுவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் - என்றார். (மஒ.5.22)

## அறிகுறியற்ற...

கொரோனாத் தொற்றாளர்கள் எண்ணிக்கை கடந்த ஏப்ரல் மாதம் தமிழ் சிங்களப் புத்தாண்டின் பின்னர் நாட்டில் சடுதியாக அதிகரித்தது. தொற்றாளர்களைத் தங்கவைப்பதற்கான முகாம்கள் இராணுவத்தினரின் உதவியுடன் பல இடங்களிலும் அமைக்கப்பட்டு வந்தன. ஆனாலும் மருத்துவ ஆளணிப் பற்றாக்குறை காரணமாக அந்தத் திட்டத்தை அரசு தொடர முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் மருத்துவத்துறை ஆரம்பத்தில் கோரிக்கை விடுத்த திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்த முடிவெடுத்துள்ளது.
அறிகுறிகளற்ற தொற்றாளர்கள் அவர்களது வீடுகளில் வைத்து கண்காணிக்கப்படுவார்கள். இந்தத் திட்டம் நாளையிலிருந்து ஆரம்பமாகவுள்ளது. தொற்றாளர்களுக்கு ஏதாவது அறிகுறிகள் தென்பட்டால் அவர்கள் உடனடியாக மருத்துவமனைகளில் சேர்க்கப்படுவார்கள் என்று இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே குறிப்பிட்டார். (மஒ.5.)

## சிகிச்சை...

வருகின்றனர். இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள தொற்றாளர்களில் தற்போது 27 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
இந்நிலையில், எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் நோய் அறிகுறி இல்லாமல் அடையாளம் காணப்படும் தொற்றாளர்கள் வீடுகளில் இருந்தே சிகிச்சை பெற வேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளோம். சிகிச்சை நிலையங்களில் காணப்படும் இடப் பற்றாக்குறையே இதற்குப் பிரதான காரணமாகும். இவ்வாறு இராணுவத் தளபதியும் கொரோனா கட்டுப்பாட்டு செயலணியின் தலைவருமான சவேந்திர சில்வா தெரிவித்தார்.
அறிகுறிகளற்ற தொற்றாளர்கள் வீடுகளில் வைத்து சிகிச்சையளிக்கப்படவுள்ளனர் என இராஜாங்க அமைச்சர்களான பேராசிரியர் சன்ன ஜயசுமன்ன மற்றும் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே ஆகியோர் கடந்த வாரம் தெரிவித்திருந்தனர். ஆனாலும் அவ்வாறானதொரு திட்டம் இல்லை என்று இராணுவத் தளபதி மறுத்திருந்தார். இந்த நிலையிலேயே நேற்று மேற்படி கருத்தை சவேந்திர சில்வா முன்வைத்துள்ளார்.
'மருத்துவர்களால் வீடுகளில் கவனிக்கப்படும் நோய் அறிகுறி இல்லாத தொற்றாளர்கள் 14 நாள்களுக்கு தனிமைப்படுத்தப்படுவார்கள். வீடுகளும் 14 நாள்களுக்கு தனிமைப்படுத்தப்பட்டிருக்கும். அந்த வீட்டில் இருக்கும் ஏனையோரும் வெளியில் செல்ல முடியாதவாறு தனிமைப்படுத்தப்படுவார்கள். வீடுகளில் கவனிக்கப்படும் நோய் அறிகுறி இல்லாத தொற்றாளர்களின் நிலைமை மோசமடைந்தால் மட்டும் அவர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்படுவார்கள்' - என்றார். (மஒ.5.22)

## பொலிஸாரின்...

போல் உத்தரவிட்டார்.
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை கோப்பாய் பொலிஸ் பிரிவில் தடைசெய்யக் கோரி பொலிஸாரால் இன்று ஏ அறிக்கை விண்ணப்பம் செய்யப்பட்டது.
இலங்கை குற்றவியல் சட்டம் 106ஆம் பிரிவு மற்றும் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புச் சட்டத்தின் கீழ் இந்த ஏ அறிக்கையை கோப்பாய் பொலிஸார் முன்வைத்தனர். நினைவேந்தல் நிகழ்வுகளால் சட்டம் மீறப்பட்டது எனக் கண்டறியப்பட்டால் பி அறிக்கையின் கீழ் விண்ணப்பம் செய்யுமாறு உத்தரவிட்ட நீதிவான், கோப்பாய் பொலிஸாரால் தடை கோரிய ஏ விண்ணப்பத்தை நிராகரித்தார். (ம-26)

## யாழ்ப்பாணத்தில்...

கர்ப்பிணிப் பெண்ணின் மகப்பேற்று சத்திர சிகிச்சையை யாழ். போதனா மருத்துவமனையின் மகப்பேற்று மருத்துவ நிபுணர் சரவணபவன் மேற்கொண்டார். பிரசவத்தின் பின்னர் தாய் தொற்றிலிருந்து குணமடைந்தார். குழந்தைகளுக்கு தொற்று ஏற்பட்டிருக்கவில்லை. தாயாரும் குணமடைந்ததைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் அவர்கள் வீடு திரும்பினர். (ப-இ)

## யாழ். போதனா...

பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் எஸ். சிறிபவானந்தராஜா தெரிவித்தார்.
'கொரோனா விடுதியில் 29 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். 15 ஆண்களும், 14 பெண்களும் இதுவரை சேர்க்கப்பட்டுள்ளனர். அவசர சிகிச்சைப் பிரிவில் 3 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர்' என்றும் அவர் குறிப்பிட்டார். (மஒ.5)

## 62 பேருக்கு...


மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்:
இன்று (நேற்று) 858 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 36 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 6 பேரும், வவுனியா மாவட்டத்தில் 11 பேரும், மன்னார் மாவட்டத்தில் 2 பேரும் என 61 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் பிரிவில் சேர்க்கப்பட்ட 3 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. மல்லாவி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் மூவரும் சுயதனிமைப்படுத்தலில் கண்காணிக்கப்பட்டவர்கள்.
கிளிநொச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் தொற்றாளர்களுடன் முதல் நிலைத் தொடர்பாளர்களாக சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர்கள்.
பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தரும்புரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
வவுனியாவில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்கள் 6 பேருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 5 பேருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்ட 18 பேருக்கும் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் 16 பேருக்கும் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருவருக்கும் என 36 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 15 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது - என்றார். (ம-26)

## பி.சி.ஆர். ...

தாமதம் ஏற்பட்டுள்ளது.
யாழ்ப்பாண மாவட்டத்தில் நாள்தோறும் பெற்றுக்கொள்ளப்படும் பி.சி.ஆர். மாதிரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக போதனா மருத்துவமனையில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். சோதனையின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டது. பகல் ஒரு தடவை இரவு ஒரு தடவை என்று நாள் ஒன்று இரண்டு தடவைகள் சோதனைகள் மேற்கொள்ள ஆரம்பிக்கப்பட்டன.
இந்த நிலையில் நேற்றுமுன்தினம் திடீரென இயந்திரத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளது. இதனால் 88 மாதிரிகளின் முடிவுகள் மாத்திரமே வெளியிடப்பட்டன. 300 க்கும் மேற்பட்ட மாதிரிகளின் முடிவுகள் வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. (மஒ.5.26)

# செவ்வாயில் சீனாவின் ரோபோ ஆய்வு ஊர்தி விண்ணிலும் அமெ., சீனா பூகோளப் போட்டி!

பீஜிங், மே 16
தற்போது செவ்வாயில் அமெரிக்கா தனித்து இல்லை. போட்டிக்கு சீனாவும் கூடவே நிற்கிறது. சீனா அதன் அறிவியல் சாதனைகளில் ஒரு மைல் கல்லாக தானியங்கி ரோபோ விண்கலம் ஒன்றை செவ்வாய்க் கிரகத்தில் தரையிறக்கி உள்ளது. அமெரிக்காவைத் தொடர்ந்து செவ்வாயில் தண்ணீர் மற்றும் உயிரியல் தடயங்களை ஆய்வு செய்யும் வசதிகளுடன் கூடிய நவீன விண்கலத்தை செவ்வாயில் தரையிறக்கிய இரண்டாவது நாடு சீனா ஆகும்.



'ஜுராங்' எனப் பெயரிடப்பட்ட தானியங்கி ரோபோ விண்கலம் நேற்று சனிக்கிழமை செவ்வாய்க் கிரகத்தின் வடபகுதி மேற்பரப்பில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது என்னும் தகவலை சீனாவின் தேசிய விண்வெளி நிர்வாக மையம் உறுதிப்படுத்தி உள்ளது.
சீனப் புராணக் கதைகளில் 'ஜுராங்' என்பது நெருப்புக் கடவுளின் பெயரைக் குறிக்கிறது. சுமார் இருநூறு கிலோ எடை கொண்ட சக்கரங்களில் நகரக் கூடிய அந்த ரோபோ ஊர்தி நாசாவின் பேர்சிவரன்ஸ் விண்கலத்தைப் போன்றே நவீன கமெராக்கள் உட்பட பல ஆய்வுக் கருவிகளையும் பரிசோதனை வசதிகளையும் கொண்டது ஆகும். அதன் லேஸர் வசதிகள் பாறைகளை துளைத்து ஆய்வு செய்து பண்டைய உயிர்ச் சுவடுகளைக் கண்டறியும். தரையின் தண்ணீர் [illegible]ளையும் ஆய்வு செய்யும். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த வாகனங்களில்

# குடும்பத்துடன் சென்றால் மாஸ்க் கட்டாயமில்லை!

கொழும்பு, மே 16
சொந்த வாகனங்களில் குடும்பத்தினருடன் சென்றால், மாஸ்க் அணிவது கட்டாயமில்லை என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.
எனினும் குடும்பத்தினர் தவிர்ந்த ஏனைய உறவினர்களுடன் பயணிக்கும் போது மாஸ்க் கட்டாயம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம)

# நீடிக்கப்பட்டது மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, மே 16
நாட்டின் சில பகுதிகளில் விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.
இலங்கையின் தென்பகுதியில் அண்மைய நாள்களாக வெள்ளப்பெருக்கும், மண்சரிவு இடர்களும் இடம்பெற்று வருகின்றன. களுத்துறை, காலி, மாத்தறை, கேகாலை, கொழும்பு ஆகிய பகுதிகளுக்கு மண்சரிவு எச்சரிக்கை கடந்த இரு தினங்களுக்கு முன்னர் விடுக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது அந்த எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது. (ம)

# கொரோனா விடுதிகள் முல்லையில் இல்லை

யாழ்ப்பாணம், மே 16

அனைத்து மாவட்டங்களிலும் கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சை யளிப்பதற்கு விடுதிகள் தயார்படுத்துமாறு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியிருந்த நிலையிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்னமும் உருவாக்கப்படவில்லை. இதனால் கொரோனாத் தொற்றுக்குள்ளான கர்ப்பிணித்தாய் ஒருவர் கிளிநொச்சி கிருஸ்ணபுரம் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் கொரோனா கொத்தணி ஏற்பட்டிருந்தது. அதில் 2 மாதக் கர்ப்பிணித் தாய் ஒருவரும் தொற்றுக் குள்ளாகியிருந்தார். புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையிலேயே அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சையளிக்குமாறு வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டபோதும், அதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா சிகிச்சை விடுதி ஒவ்வொரு மாவட்டத்திலும் உருவாக்கப்படவேண்டும் என்று இந்த மாத ஆரம்பத்தில் சுகாதார அமைச்சு அறிவித்திருந்தது. அதனைவிட அறிகுறி அற்ற 34 வாரங்களுக்கு உட்பட்ட கர்ப்பிணித் தாய்மாரை அந்த மாவட்டத்திலுள்ள பிரதேச அல்லது மாவட்ட மருத்துவமனைகளில் சிகிச்சையளிப்பதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளரால் இரண்டு நாள்களுக்கு முன்னர் சுற்றறிக்கை அனுப்பிவைக்கப் பட்டது. ஆனாலும் இதற்கு அமைவான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவில்லை. இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனா விடுதி ஆரம்பிப்பதற்குரிய வசதிகள் இருக்கின்றன எனவும், மாவட்ட மருத்துவமனைக்குரிய பணிப்பாளர் இன்னமும் நியமிக்கப்படவில்லை என்பதால் அதில் தாமதங்கள் நிலவுகின்றன எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (மஒ.5)

# முள்ளியவளையைச் சேர்ந்த சிறுமியைக் காணவில்லை!

பொலிஸில் முறைப்பாடு



முல்லைத்தீவு, மே 16

முள்ளியவளை முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த கிறிஸ்துராசா மிதுசிகா (வயது 15) என்ற சிறுமியைக் காணவில்லை என்று முள்ளியவளை பொலிஸில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுமியை 35 நாள்களாகக் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் முள்ளியவளை பொலிஸாரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, சம்பவம் குறித்து விசாரணை மேற்கொண்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்தனர். (ம-19)


## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கில் 3 அறைகள், இணைந்த குளியலறை, வாகன தரிப்பிட வசதியுடனான நவீன வீடு வாடகைக்கு உண்டு.

077 547 2377

## மணமகன் தேவை

1990. யாழிந்து. மூலம், Management Assistant, சொந்த இடம்: இடைக்காடு. பதிவு: 5857. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக்கட்டணத்தில் 20% கழிவு.
Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriageService.com
076 664 9401

## மணமகள் தேவை

1985. யாழிந்து. பூரட்டாதி. Doctor (MBBS). சொந்த இடம்: யாழ்ப்பாணம். பதிவு: 5899. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.
Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriageService.com
076 664 9401

## மணமகன் தேவை

1990. யாழிந்து. கேட்டை. Engineer, சொந்த இடம்: காரைநகர். பதிவு: 5924. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு
Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriageService.com
076 664 9401

## மணமகள் தேவை

1993. யாழிந்து. திருவோணம். Quantity Surveyor, சொந்த இடம்: பருத்தித்துறை. பதிவு: 5748. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.
Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriageService.com
076 664 9401

## மணமகன் தேவை

1990. யாழிந்து. ஆயிலியம். Lecturer, சொந்த இடம்: கந்தர்மடம். பதிவு: 5890. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.
Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriageService.com
076 664 9401

## மணமகள் தேவை

1978. யாழிந்து. ஹஸ்தம். Teacher, சொந்த இடம்: வரணி பதிவு: 5848. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.
Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriageService.com
076 664 9401

## மணமகன் தேவை

1991. யாழிந்து. ஸ்வாதி. QA Engineer. சொந்த இடம்: சுண்டுக்குழி. பதிவு: 59[illegible]. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.
Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriageService.com
076 664 9401

## மணமகள் தேவை

1991. யாழிந்து. அனுஷம். Teacher. சொந்த இடம்: காரைநகர் பதிவு: 5836. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.
Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriageService.com
076 664 9401

## காணி விற்பனைக்கு

அச்சுவேலி வைத்தியசாலையில் இருந்து 750M தூரத்தில் மீனாட்சி அம்மன் கோவிலுக்கு அருகாமையில் வீட்டுடன் கூடிய 6 3/4 பரப்புடைய காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு 077 652 9007

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் ஊடாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வந்து மீட்டு அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவியரீதில் சிநேகபூர்வமான சேவை.

AAA Gold Center
076 568 4346

## தும்புசோறு (தேங்காய் சருள்கள்) சிப்ஸ் (Husk chips) விலைக்கு பெற்றுக் கொள்ளப்படும்

தும்புசோறு (CFP), தேங்காய் மட்டை துண்டுகள் (Husk chips) 10C, 7C (Washed, Unwashed) மற்றும் தும்பு வகைக்ள் விநியோகஸ்தர்கள் தேவை. அந்த இடத்திலேயே காசு கொடுக்கப்படும்.

தமிழில் - 076 9721128
ஆங்கிலத்தில் - 077 2327437
சிங்களத்தில் - 077 2327437


# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 | 14 |
| 12 | 05 |
| 1949 | 2021 |

## சிவப்பிரகாசம் திருஞானகுமார்

புன்னாலைக்கட்டுவன் வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் திருஞானகுமார் கடந்த (14.05.2021) வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம்-இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சீனித்தம்பி - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வலக்சுமியின் அன்புக் கணவரும், பிரகலாதன், பிறேமிலா, பிரபாஜினி, பிரதாபன், பிரணவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனோகரி, கஜேந்திரன், தவகுமார் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிவகுமாரி, வசந்தகுமாரி, இராசகுமாரி, ஜெயகுமார், சந்திரகுமாரி, நந்தகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காண்டீபன், சந்தோஸ், சரண்ஜன், வரண்ஜன், கரிஸ்ஜன் ஆகியோரினி பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் தெற்கு ஆலடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புன்னாலைகட்டுவன் வடக்கு,
புன்னாலைகட்டுவன்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 11 | 14 |
| 03 | 05 |
| 1956 | 2021 |

## திருமதி பரந்தாமன் இமாவதி

(பனை அபிவிருத்திச் சபை-இளைப்பாறிய ஊழியர்)

கந்தரோடையை பிறப்பிடமாகவும் ஓஸ்கா லேன் உரும்பிராய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரந்தாமன் இமாவதி கடந்த (14.05.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அரியகுட்டி பரந்தாமனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆசிரியமணி ஆறுமுகம் - சரஸ்வதி தம்பதியினரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான அரியகுட்டி-விஜயலக்ஷ்மி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான புனிதவதி, கார்திகேசர், திலகவதி மற்றும் புஸ்பவதி, குணவதி, கமலாவதி ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்ற தணிகாசலம் மற்றும் சாரதாதேவி, குகநேசமலர், காலஞ்சென்ற நிர்மலா மற்றும் சித்திராங்கதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2021) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஓஸ்கா லேன்,
உரும்பிராய்.

தகவல்: குடும்பத்தினர்.
077 494 8153
077 230 2330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பி.சி.ஆர். மாதிரிகள் எடுக்காமல் திருப்பி அனுப்பினால் நடவடிக்கை

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், மே 16**

**பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ள வருபவர்களிடம் மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பினால், சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவத் தளபதியும், கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவருமான சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பிரதேச மருத்துவமனை ஒன்றுக்கு பி.சி.ஆர். சோதனைக்குச் சென்ற ஒருவரை அங்கு வெளிநோயாளர் பிரிவில் கடமையிலிருந்த மருத்துவர் திருப்பி அனுப்ப முயன்றுள்ளார். தொற்றாளர்களுடன் முதல் நிலை தொடர்பில்லாதவர்கள் பி.சி. ஆர். சோதனை செய்யத் தேவையில்லை என்று காரணம் கூறியுள்ளார். தனக்கு அறிகுறிகள் தென்படுகின்றமையால் பி.சி.ஆர். சோதனை மேற் கொள்ளவேண்டும் என்று கூற, வேறு வழியில்லாமல் மாதிரிகள் பெறப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இராணுவத் தளபதியிடம் கேட்டபோது, பி.சி. ஆர். சோதனைக்கு வருபவர்களை திருப்பி அனுப்பக்கூடாது. இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுமாக இருந்தால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நாம் நிச்சயம் நடவடிக்கை எடுப்போம். பி.சி.ஆர். சோதனைக்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும்.

இதேவேளை நாடு முழுவதும் பி.சி. ஆர். சோதனைகள் இடம்பெறும் அதேவேளை, கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன - என்றார். (ஒ.5,22)

# பி.சி.ஆர். பரிசோதனைக்கு தாமாகவே முன்வாருங்கள்

## சுகாதார பரிசோதகர் அறிவிப்பு



கொடிகாமம்,மே 16

தென்மராட்சி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களுடன் தொடர்புகளைப் பேணியோர் தாமாகவே முன்வந்து பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும் என்று எழுதுமட்டுவாழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளார்.

சாவகச்சேரி பிரதேச சபையின் மிருசுவில் உப அலுவலக பணியாளர் ஒருவர், உசன் பகுதி பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோருக்கும், உசன் பகுதியில் தனிமைப்படுத்தலில் இருந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஐவருக்கும், கொடிகாமம் தெற்கில் தனிமைப்படுத்தலில் இருந்த ஒருவருக்கும் கொரோனாத் தொற்று நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்டது. இந்த நிலையிலேயே குறித்த அறிவித்தலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் விடுத்துள்ளார். (ஐ-159)

# பட்டாணிச்சூர் கிராமத்தில் திடீர் சுற்றிவளைப்பு

## பலருக்கு எதிராக முறைப்பாடு பதிவு

வவுனியா, மே 16

வவுனியா பட்டாணிச்சூர் கிராமத்தில் பொலிஸார் மற்றும் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து திடீர் கண்காணிப்பு நடவடிக்கையை நேற்று முன்னெடுத்தனர். இதன்போது பலருக்கு எதிராக முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டன.

இலங்கையில் கொவிட் தொற்று பரவலானது தற்போது தீவிரமடைந்து வருவதையடுத்து நாடு முழுவதும் 3 நாள்கள் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் அத்தியாவசிய சேவைகள் மற்றும் மருந்தகங்கள் என்பவற்றுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் முஸ்லிம் மக்களின் நோன்புப் பெருநாள் கொண்டாட்டங்கள் அமைதியான முறையில் இடம்பெற்று வருகின்றன. இதனையடுத்து, வவுனியா பட்டாணிச்சூர் கிராமத்தில் சுகாதார பிரிவினர் மற்றும் பொலிஸார் இணைந்து திடீர் கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர். இதன்போது குறித்த கிராமத்தில் முகக்கவசமின்றி பொது இடத்தில் விளையாட்டில் ஈடுபடல், மக்கள் ஒன்றுகூடி இருந்தமை, வர்த்தக நிலையங்கள் திறந்திருந்தமை என பல்வேறு செயற்பாடுகளில் அரச பயணத் தடை உத்தரவு மற்றும் சுகாதார விதிமுறைகளை மீறிச் செயற்பட்டவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப் பட்டு அவர்களுக்கு எதிராக முறைப்பாடுகளும் பதியப்பட்டன.

அத்துடன், வாகன ஆசனத்துக்கு மேலதிகமாக மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டியில் பயணம் செய்தவர்களும் வழிமறிக்கப்பட்டு கடும் எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டனர். (ப-18)



# கல்வி, கல்விசாரா ஊழியருக்கும் தடுப்பூசி


## ஆசிரியர் சேவை சங்கம் கோரிக்கை

பாடசாலை மீண்டும் தொடங்குவதற்கு முன் ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு தடுப்பூசி வழங்குவது தொடர்பாக கல்வி அமைச்சுக்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் பிரதித் தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவிக்கையில்:

கொரோனாத் தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்காக தடுப்பூசிகளை அறிமுகப்படுத்தியதன் மூலம், நாட்டின் முன் நின்று பணிபுரிந்த சுகாதார மற்றும் பாதுகாப்பு ஊழியர்களுக்கு தடுப்பூசி வழங்கியதன் பின் மிக ஆபத்தான சூழ்நிலையில் பாதுகாத்ததுடன் பரீட்சைக் கடமைகளில் ஈடுபட்ட ஆசிரியர்கள் உட்பட கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். பாடசாலைகள் தொடங்குவதற்கு முன்பு அனைத்து கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கும் தடுப்பூசி போட வேண்டும். எங்கள் சங்கத்தால் இது தொடர்பில் கடந்த பெப்ரவரி 23ஆம் திகதியன்று எழுத்து மூலம் கோரப்பட்டது. அந்த நேரத்தில் தடுப்பூசி போடப்படும் என்ற அறிவிப்பை நிறைவேற்றத் தவறியதற்கு இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் எதிர்ப்புத் தெரிவிப்பதோடு சுகாதாரத் துறையுடன் கலந்துரையாடல்களை நடத்தி விரைவாக தடுப்பூசிகளை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம் - என்றார். (ப-159)

# பிறந்த நாள் கொண்டாடிய எட்டு பேர் சுயதனிமையில்




வடமராட்சி,மே 16

வடமராட்சி அத்தாய் பகுதியில் பிறந்த நாள் நிகழ்வு கொண்டாடிய சுமார் 8 பேர் சுய தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் வடமராட்சி அத்தாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கொவிட் 19 கட்டுப்பாடுகளை மீறி, அத்தாய் பகுதியில் பிறந்த நாள் நிகழ்வு நடைபெறுகின்றது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. இதனை ஊர்ஜிதப்படுத்த கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி செந்தூரன், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் நெல்லியடி பொலிஸார் ஆகியோர் இணைந்து குறித்த இடத்துக்குச் சென்றுள்ளனர். அங்கு பிறந்த நாள் நிகழ்வில் கலந்து கொண்டோர் தப்பிச் சென்றுள்ளனர். இதனால் எடுக்கப்பட்ட ஒளிப்படங்களை பார்வையிட்டு சுமார் 8 பேர் சுய தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளனர். (ப-இ)

# அடிக்கடி பி.சி.ஆர் சோதனை செய்தால் முடிவுகளைப் பெற தாமதம் ஏற்படும்

## வீட்டிலேயே இருங்கள் என்று பரு. சுகாதாரப் பரிசோதகர் எச்சரிக்கை

கொடிகாமம், மே 16

கொரோனாத் தொற்றுக்கான பி.சி. ஆர் பரிசோதனை, விளையாட்டுக்காக எடுப்பதல்ல. அது விஞ்ஞான ரீதியான ஆய்வு மற்றும் கட்டுப்பாட்டுக்கானது என பருத்தித்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஏ.ஜே.றொனால்ட் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

சிலர் தொடர்புகளை மறைத்து நடமாடுவதாலும், எழுமாற்று பரிசோதனைகளில் பங்குகெடுத்துவிட்டு, பொறுப்பற்று வெளியில் நடமாடுவதும் இந்த தொற்று பரவலை அதிகரிக்கின்றது. ஒரு பி.சி.ஆர். பரிசோதனைக்கு 9 ஆயிரம் ரூபா வரை செலவாகும். பி.சி.ஆர் எடுக்கும் சுகாதார குழாமின் மனிதவலு, வேலைப்பழு மற்றும் பி.சி.ஆர் எடுப்பவரின் ஆபத்து நிலை, உடல் உபாதை என்பவை இதற்குள் அடங்காது. பி.சி.ஆர் எடுப்பது அந்த கணத்தில் தொற்று உள்ளதா எனக் கண்டறிந்து கட்டுப்படுத்த மட்டுமே. பி.சி.ஆர். நெகட்டிவ் என்றால் இனி கொரோனா அவருக்கு வராதென்றில்லை. அடுத்த கணங்கூட அவர் தொற்றாளராகலாம்.

தேவையற்றவிதமாக அதிகளவாக பி.சி.ஆர். எடுப்பது அதன் தொழிநுட்ப வினைத்திறனில் பாதிப்பை ஏற்படுத்துவதோடு முடிவுகள் வரத் தாமதம் ஏற்படுவதும், அதற்குள் பலரும் தொற்றாளராகும் சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன. கொரோனாவைக் கட்டுப்படுத்த செய்ய வேண்டியதெல்லாம் வீட்டுக்கு வெளியில் செல்லும்போது மூக்கு, வாயை மூடி முகக்கவசம் அணியுங்கள். சந்திகள், கடைகளில் வெட்டியாக குந்தியிருப்பதைத் தவிருங்கள். நபர்களுக்கிடையே மூன்றடிக்கு குறையாத இடைவெளியைப் பேணுங்கள். வெளியில் செல்லும் போதும் வீட்டுக்கு திரும்பும் போதும் கைகளை சவர்க்காரமிட்டுக் கழுவுங்கள். வழிபாட்டுத் தலங்களில் ஒன்றுகூடுவதைத் தவிருங்கள் - என்றார். (ப-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலைமையும் நினைவேந்தலும்

அரச இயந்திரத்தின் அடக்குமுறைகளால் விரக்தியுற்றிருக்கும் தமிழ் மக்களுக்கு, ஆறுதலளிக்கும் வகையில் அவ்வப்போது நீதித்துறையால் உத்தரவுகள் பிறப்பிக்கப்படு கின்றன. இறந்துபோன தங்கள் உறவுகளை நினைவேந்தும் உரிமைகூட மறுக்கப்பட்டு, வெதும்பியிருந்த தமிழ் மக்களுக்கு, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் அளித்துள்ள உத்தரவு சற்று ஆறுதல் அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

நாட்டில் ராஜபக்சக்கள் ஆட்சிப் பீடம் ஏறிய பின்னர், தமிழ் மக்களுக்கு நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றமை கண்கூடு. அவற்றில் நினைவேந்தல் உரிமை மறுக்கப்படுவதும் ஒன்று. போரில் இறந்த தங்கள் உறவுகளை மே மாதம் 18ஆம் திகதி ஆண்டுதோறும் தமிழ் மக்கள் நினைவேந்துகின்றனர். இந்தத் திகதிக்கு முன்னராக நினைவேந்தல் வாரமும் கைடைப்பிடிக்கின்றனர். பயங்கரவாதச் சாயம் பூசி நினைவேந்தலுக்குத் தடைகள் ஏற்படுத்தி வந்தவர்கள், அதன்பின்னர் கொரோனாத் தொற்றைக் காரணம் காட்டித் தடைகளை ஏற்படுத்தியிருந்தனர்.

தமிழ் மக்கள் போரில் இறந்த தங்கள் உறவுகளை நினைவேந்துவதைக் கூடப் பொறுக்க முடியாது, முள்ளிவாய்க்காலில் உருவாக்கப்பட்டிருந்த நினைவுத் தூபி இடித்தழிக்கப்பட்ட மிலேச்சத்தனமான செயல் சில நாள்களுக்கு முன்னர் நடந்தது. அந்த இடமே பாதுகாப்புத் தரப்பினரின் கட்டுப்பாட்டில் இருக்கும்போது 'இனந்தெரியாதவர்கள்' இந்தச் செயலைச் செய்தார்கள் என்று அதிகாரத் தரப்புக் கூறுவதைக் கேட்க வேண்டிய நிலைமையில் இருக்கின்றார்கள் தமிழ் மக்கள்.

மறுபுறத்தில் மே 18ஆம் திகதி போரில் இறந்த தங்கள் உறவுகளை நினைவுகூருவதைத் தடுக்கும் கைங்கரியத்தில் பொலிஸார் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றனர். முல்லைத்தீவில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் இருந்தும், நினைவேந்தலுக்கான நீதிமன்றத் தடை உத்தரவு பெறும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதில் வெற்றியும் கண்டிருக்கிறார்கள்.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் இந்தச் செயல்களால் வெதும்பியிருந்த தமிழ் மக்களுக்கு, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவு சற்று ஆறுதலளித்திருக்கின்றது. மே 18ஆம் திகதி நினைந்தலுக்குத் தடை கோரி கோப்பாய் பொலிஸார் சமர்ப்பித்த 'ஏ' அறிக்கையை நிராகரித்திருக்கின்றது நீதிமன்று. இலங்கைக் குற்றவியல் சட்டத்தின் 106ஆம் பிரிவின் கீழும், தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த் தடுப்புச் சட்டத்தின் கீழும் 'ஏ' அறிக்கையைத் தாக்கல் செய்த பொலிஸாருக்கு சூடு வைத்திருக்கின்றது நீதிமன்றம்.

சம்பவம் இடம்பெறப்போகும் ஊகத்தில், தடை கோரும் 'ஏ' அறிக்கையைத் தாக்கல் செய்யாது, சட்டம் மீறப்பட்டமை கண்டறியப்பட்டால் 'பி' அறிக்கையைத் தாக்கல் செய்யப் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது நீதிமன்றம்.

இந்த உத்தரவு தமிழ் மக்களுக்கு நிம்மதியைத் தந்தாலும், பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டிய கடமை தமிழ் மக்களுக்கு உண்டு. இப்போதைய எங்கள் செயல்கள் எதிர்காலத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களில் ஆதிக்கம் செலுத்தலாம் என்பதை உணர்ந்து எமக்குக் கிடைத்துள்ள இடைவெளியைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

தற்போதுள்ள கொரோனாத் தொற்று நிலைமைகளை உணர்ந்து, நினைவேந்தல் நிகழ்வுகளை ஏற்பாடு செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒழுங்கமைப்போருக்கும், தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் முன்னுள்ளது. எதை வைத்து, தமிழ் மக்கள் மீது அடக்குமுறையை ஏவிவிடலாம் என்று கண்ணில் விளக்கெண்ணை வைத்துத் தேடிக் கொண்டிருப்போருக்கும் சந்தர்ப்பங்களை வழங்கிவிடக் கூடாது.

மே 18 நினைவேந்தலைச் சரியான முறையில் திட்டமிட்டுக் கடைப்பிடிக்க வேண்டும். இதுவே இப்போது அவர்கள் முன்னுள்ள பொறுப்பும், சவாலும். அதற்குரிய திட்டமிடல்களை தமிழ் மக்கள் பிரதிநிதிகளும், நினைவேந்தல்களை ஒழுங்கமைப்போரும் சரியான முறையில் மேற்கொள்ள வேண்டும்.



# இலங்கையில் இனப் படுகொலை நடந்ததை ஏற்றுக்கொள்ளுங்கள்

## ஆஸி. நாடாளுமன்றில் பிரேரணை

**கொழும்பு, மே 16**

**இலங்கையில் தமிழினப் படுகொலை இடம்பெற்றது என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். அதற்கமைவாக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்கு ஆதரவு வழங்க வேண்டும்.**

இவ்வாறு வலியுறுத்தி, ஆஸ்திரேலிய நியூ சவுத் வேல்ஸ் நாடாளுமன்றில் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

நியூ சவுத் வேல்ஸ் நாடாளுமன்றின் கீழ் சபையில், உறுப்பினர் ஹக் மெக்டெமொற் தனிநபர் பிரேரணையொன்றை முன்வைத்தார். இலங்கையில் தமிழினப் படுகொலை இடம்பெற்றது என்பதை ஆஸ்திரேலியா ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்கமைவாக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முன்நிறுத்துவதற்கு, ஏனைய நாடுகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் பிரேரணையூடாக வலியுறுத்தியுள்ளார். (எ-4)

*தடையையும் மீறி*

## இலவசத்துக்குக் குவிந்த ஆயிரக்கணக்கான மக்கள்

மீகொட பொருளாதார மத்திய நிலையத்தில், மரக்கறிகளை கொள்வனவு செய்வதற்காக பொதுமக்கள் வராதமையால், அவற்றை இலவசமாக வழங்குவதாக அறிவிக்கப்பட்டதும், பயணத் தடையையும் மீறி ஆயிரத்துக்கும் அதிகமானோர் நீண்ட வரிசையில் நின்று மரக்கறிகளைப் பெற்றுச்செல்ல வந்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பொருளாதார மத்திய நிலையங்களை திறந்து வைக்குமாறு அரசு அறிவிப்பு விடுத்திருந்த நிலையில், இரவுநேர மீகொட பொருளாதார மத்திய நிலையம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து, எதிர்வரும் திங்கட்கிழமை வரை மரக்கறிகளை கொண்டுவருவதை நிறுத்தவும், கடைகளை மூடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

# முள்ளிவாய்க்காலுக்குச் செல்ல முல்லையில் 32 பேருக்கு தடை

முல்லைத்தீவு, மே 16

பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் வகையிலோ தனிமைப்படுத்தல் நோய்த் தடுப்பு சட்டத்துக்கு முரணாகவோ நடக்கக்கூடாது என்று தெரிவித்து பொலிஸாரால், முல்லைத்தீவில் 32 பேருக்கு எதிராக நீதிமன்றத் தடை உத்தரவுகள் பெறப்பட்டுள்ளன.


முல்லைத்தீவு பொலிஸ் பிரிவில் வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேசசபை தவிசாளர் க.விஜிந்தன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சங்கத்தலைவி ம.ஈஸ்வரி ஆகியோர் உள்ளிட்ட 5 பேருக்கு எதிராகவும், புதுக்குடியிருப்பு பொலிஸாரால் வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உப தவிசாளர் க.ஜனமேஜயந், பிரதேச சபை உறுப்பினர்களான க.விஜயகுமார், ஆ.ஜேன்சன் ஆகியோர் உள்ளிட்ட 9 பேருக்கு எதிராகவும், ஒட்டுசுட்டான் பொலிஸாரால் பிரதேச சபை உறுப்பினர் இ.சத்தியசீலன் உள்ளிட்ட மூவருக்கு எதிராகவும், மல்லாவி பொலிஸ் பிரிவில் 5 பேருக்கு எதிராகவும், ஜயன்குளம் பொலிஸ் பிரிவில் 4 பேருக்கு எதிராகவும், மாங்குளம் பொலிஸ் பிரிவில் 6 பேருக்கு எதிராகவும், நீதிமன்ற தடை உத்தர்வுகள் பெறப்பட்டுள்ளன.

குறித்த தடை உத்தரவில் போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூர அமைக்கப்பட்ட விளக்கேற்றல் தூபியிலோ அல்லது குறித்த பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதிகளிலோ பெயர் குறிப்பிடப்படும் நபர்களும் அவர்களது உறுப்பினர்களும், எதிர்வரும் 16 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் வகையிலோ தனிமைப்படுத்தல் நோய்த் தடுப்பு சட்டத்துக்கு முரணாகவோ நடக்கக் கூடாது - என்றுள்ளது. (ப-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மணல் அகழ்வை தடுத்த கிராம அலுவலர் மீது தாக்குதல் முயற்சி

## தருமபுரம் பொலிஸில் முறைப்பாடு



**கிளிநொச்சி, மே 16**
**சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட நபர்களால் கிராம அலுவலர் ஒருவர் மீது தாக்குதல் முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் கிழக்கு நெத்தலியாறு பகுதியில் கடந்த புதன்கிழமை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.
அப் பகுதியில் காணப்படும் ஒதுக்கீட்டு காணியில் ஒருவர் கனரக வாகனம் கொண்டு துப்புரவு பணியில் ஈடுபட்டுள்ளதுடன், சட்டவிரோதமான முறையில் அனுமதியற்ற மணல் அகழ்வையும் மேற்கொண்டுள்ளார். குறித்த விடயம் தொடர்பில் பிரதேசத்துக்குப் பொறுப்பான பெண் கிராம அலுவலர் களப் பயணம் ஒன்றை மேற்கொண்டு, அங்கு மேற் கொள்ளப்படும் சட்டவிரோத செயற்பாட்டை தடுக்க முற்பட்டுள்ளார். இதனை அடுத்து குறித்த சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபட்ட நபர் கனரக வாகனத்தால் கிராம அலுவலரை மோதும் வகையிலான அச்சுறுத்தலை மேற்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த விடயம், கண்டாவளை பிரதேச செயலாளர் ரி. பிருந்தா கரனின் கவனத்துக்கு கிராம அலுவலரால் கொண்டு செல்லப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பிரதேச செயலர் கள நிலைமைகளைப் பார்வையிட்டதுடன், விசாரணை களை மேற்கொண்டார். இதனை அடுத்த தருமபுரம் பகுதிக்குப் பொறுப்பாக இருந்த 572ஆம் படைப்பிரிவின் கட்டளை அதிகாரியையும் சம்பவ இடத்துக்கு வரவழைத்தார். விசாரணைகளின் பின் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் சம்பவம் தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ப-6)

---

மன்னார் கட்டையடம்பன் பகுதியில்

# முதன்முறையாக சிறுபோகச் செய்கை

## நானாட்டான் பிரதேச செயலர் தெரிவிப்பு

மன்னார், மே 16
மன்னார் செட்டியார் மகன் கட்டையடம்பன் பகுதியில் முதல்முறையாக சிறுபோக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று நானாட்டான் பிரதேச செயலர் மா.சிறிஸ்கந்தகுமார் தெரிவித்துள்ளார்.
கடந்த வாரம் நடைபெற்ற சிறு விவசாயிகளை ஊக்குவிப்பது தொடர்பான கூட்டத்தில் மன்னார் செட்டியார் மகன் கட்டையடம்பன் குளத்துக்கு கீழான பகுதிகளில் சிறுபோக பயிர்ச்செய்கை மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது.
அதன்படி வரலாற்றில் முதன்முறையாக மன்னார் செட்டியார் மகன் கடம்பன் குளத்துக்கு கீழான பகுதிகளில் சிறுபோக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.
அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கோடு காணி உள்ளவர்களையும் விவசாய காணி அற்றவர்களையும் சிறுபோக செய்கையில் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
அதன்படி குறித்த பகுதியில் 90 ஏக்கர் விவசாய காணி சிறுபோகம் செய்வதற்காக ஒதுக்கப்பட்டு மன்னார் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரால் செட்டியார் மகன் கட்டையடம்பன் கமக்கார அமைப்பிடம் கையளிக்கப்பட்டுள்ளது- என்றார். (ஜ-213)

---



# வீதிகள்தோறும் வீசப்பட்ட வங்கிக் காசோலைகள்

யாழ்ப்பாணம், மே 16
வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பல வங்கிகளின் காசோலைகள் வீதியோரங்களில் நேற்று வீசப்பட்ட நிலையில் காணப்பட்டன.
2014 ஆம் ஆண்டுக்குரிய குறித்த காசோலைகள் பல வங்கிகளுக்குரியனவாகக் காணப்பட்டதுடன். அவை அரச திணைக்களங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்குரியன என்றும் தெரிவிக்கப்பட்டது.
வவுனியாவில் வீசப்பட்டுள்ள அதிகளவான காசோலைகள் மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்தவையாக காணப்படுகின்றன.
இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் இரு வெவ்வேறு பகுதிகளில் காசோலைகள் வீசப்பட்டுள்ளன.
கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுக்காட்டு சந்தி மற்றும் கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மதுவரித்திணைக்கள அலுவலகத்தை அண்மித்த பகுதியிலும் இவ்வாறு காசோலைகள் வீசப்பட்டுள்ளன. பயன்படுத்தப்பட்ட காசோலைகள் எனினும் அவை என்ன நோக்கத்துக்காக வீசப்பட்டுள்ளன என்பது தொடர்பான விசாரணைகளை பொலிஸாரும், பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரும் மேற்கொண்டு வருகின்றன.(ஜ-110,6,113)

---

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு 12 வயதுச் சிறுவன் படுகாயம்

## கிளிநொச்சியில் சம்பவம்



கிளிநொச்சி, மே 16
கூரிய ஆயுதத்தால் 12 வயதுச் சிறுவன் தாக்கப்பட்ட சம்பவம் கிளிநொச்சியில் பதிவாகியுள்ளது. கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட அம்பாள்குளம் பகுதியில் குறித்த சம்பவம் கடந்த புதன்கிழமை மாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது. வேலியைச் சீர் செய்வதற்காகச் சென்ற சிறுவனே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளனான் என்றும், கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டமையால் கிளிநொச்சி பொது மருத்துவமனையின் சத்திர சிகிச்சைக் கூடத்துக்கு அழைத்துச் சென்று சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது என்றும் பாதிக்கப்பட்ட சிறுவனின் பெற்றோர் தெரிவிக்கின்றார்.
சம்பவம் தொடர்பில் 119 அவசர அழைப்புக்கு தகவல் வழங்கப்பட்டும் பொலிஸார் விசாரணை மேற்கொள்ளத் தவறியுள்ளனர். மறுநாள் காலை 11 மணியளவிலேயே ஆரம்ப விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
சம்பவம் தொடர்பான பூர்வாங்க விசாரணைகளை மேற்கொண்டு, தாக்கப்பட்ட சிறுவனுக்கு நீதி பெற்றுதரவேண்டும் என பாதிக்கப்பட்ட தரப்பினர் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (ப-113)

---



# உணவுப் பொதிகள் கையளிப்பு

வவுனியா,மே 16
வவுனியாவில் கடந்த ஆயிரத்து 545 ஆவது நாளாக சுழற்சிமுறை உணவுத்தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. சுவிஸ் நாட்டில் வசிக்கும் கோபிநாத் தம்பதியர் தமது உறவினரான காவியாவின் பிறந்த நாளை முன்னிட்டு இந்த உதவிகளை வழங்கினர். (ஜ-110)

---



# குருதிக்கொடை முகாம்

மன்னார்,மே 16
குருதிக்கொடை முகாம் ஒன்று மன்னார் ஆகாஷ் விடுதியில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.
மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கில் மன்னார் றோட்டரி கழகத்தினரும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளையினரும் இணைந்து குருதிக் கொடை முகாமை ஏற்பாடு செய்திருந்தனர்.
குருதிக்கொடை முகாமில் 65 க்கும் மேற்பட்டவர்கள் குருதிக் கொடை வழங்கினர். நிகழ்வில் மன்னார் பொது மருத்துவமனையின் குருதி வங்கிக்கு பொறுப்பான மருத்துவ அதிகாரி யு.பி எம் . பெர்னாண்டோ, மருத்துவர் இமானுவேல் பிரியதர்ஷன் மற்றும் மன்னார் பொது மருத்துவமனையின் தாதியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். குருதிக் கொடை வழங்கியவர்களுக்கு சிறப்பு சான்றிதழ்கள் மருத்துவர்களால் வழங்கப்பட்டன. (ஜ-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹெரோய்னுடன் ஒருவர் கைது

சாவகச்சேரி,மே 16

மிருசுவில் தவசிகுளம் பகுதியில் 800 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச் சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-26.159,9)

## இணக்கசபை அமர்வு இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,மே 16

யாழ்ப்பாண மாவட்ட காணி இணக்க சபை அமர்வு இன்று நடைபெறவிருந்த நிலையில் கொரோனாத் தொற்றுக் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் வார இறுதியில் இணக்கசபை அமர்வுகள் நடைபெற்று வந்தன. இந்த நிலையில் நாட்டில் அதிகரித்து வரும் கொரோனாத் தொற்றுக் காரணமாக பயணத் தடை விதிக்கப்பட்டுள் ளது.

இதனால் மேற்படி அமர்வு இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று காணி இணக்கசபை தவிசாளர் ரி.தேவதயாளன் தெரிவித்துள்ளார். (ஐ-50)

## மயங்கிய நிலையில் இரு இளைஞர்கள் மீட்பு

கொடிகாமம், மே 16

படுகாயமடைந்த நிலையில், மயக்கமுற்ற நிலையில் இருந்த இளைஞர்கள் இருவர் மீட்கப்பட்டு, மருத்துமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

வரணி இயற்றாலை வீதியில், பாலம் சீரமைப்பு நடக்கும் பகுதியிலேயே இருவரும் மீட்கப்பட்டுள்ளனர். வீதி ரோந்தில் ஈடுபட்ட பாதுகாப்பு தரப்பினர் அவர்களை அவதானித்து, அவசர நோயாளர் காவு வண்டியை தொடர்பு கொண்டு, சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்த்தனர். தாவளை இயற்றாலை வரணியைச் சேர்ந்த மகாலிங்கம் மகிந்தன் (வயது -28), இடைக்குறிச்சி வரணியை சேர்ந்த காந்தராசா சசீபன் (வயது-22) ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டனர்.

அவர்கள் யாழ்ப்பாணம், போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ப-159)

## பயணத்தடை நடைமுறையிலும்
# பல்வேறு வீடுகளில் திருட்டு சம்பவங்கள்



கொடிகாமம்,மே 16

**பயணத்தடை நடைமுறையில் உள்ள நள்ளிரவு வேளையிலும் பல்வேறு வீடுகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.**

நாவற்குழி 5 வீட்டுத்திட்ட பகுதியில் உள்ள 5 வீடுகளில் குறித்த் திருட்டுச் சம்பவங்கள் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு இடம்பெற்றுள்ளன.

ஒரு வீட்டில் ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா பணமும், இன்னொரு வீட்டில் 40 க்கு மேற்பட்ட வளர்ப்பு புறாக்களும், ஒரு வீட்டில் 16 வளர்ப்பு கோழிகளும், மற்றைய வீட்டில் 6 வளர்ப்பு கோழிகளும்,ஐந்தாவது வீட்டில் 5 வளர்ப்பு முயல்களும் திருடப்பட்டுள்ளன. குறித்த திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் வீட்டின் உரிமையாளர்களால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ஐ-159)

## நினைவுநாளிலும் கூட குப்பைக்காடாக குமுதினிப் படுகொலை நினைவாலயம்
### மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், மே 16

நெடுந்தீவு கடலில் 1985 மே15 ஆம் திகதி படுகொலைசெய்யப்பட்ட 36 உறவுகளின் 36ஆவது ஆண்டு நினைவு நாளிலும், இறந்த உறவுகளின் நினைவாக நெடுந்தீவு துறைமுகப் பகுதியில் அமைக்கப்பட்ட நினைவாலயம் குப்பைகள் நிறைந்து காணப்பட்டதால் மக்கள் மற்றும் உறவுகள் கடும் விசனம் தெரிவித்தனர்.

நெடுந்தீவு பிரதேச சபையால் பராமரிக்கப்படும் குறித்த நினைவாலயம் கடந்த காலங்களில் புனிதமாகப் பேணப்பட்ட நிலையில் தற்போதய பிரதேசசபை நிர்வாகம் அதன் புனிதத்தை கெடுக்கும் விதமாக செயல்படுகிறது என்று இறந்தவர்களின் உறவுகள் கவலை வெளியிட்டுள்ளனர். தற்போதைய கொரோனா பரவலை காரணம் காட்டி நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு தடைவிதிக்கப்பட்ட நிலையில் குறித்த நினைவாலயத்துக்கு நேற்றுச் சென்ற பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் உட்படப் பலர் குமுதினி நினைவாலயத்தை தூய்மைப் படுத்தி அஞ்லி செலுத்தினர்.

குறித்த நினைவாலயத்தின் தனித்துவத்தை கெடுக்கும் விதமாக நினைவாலய காணிக்குள் கடைத் தொகுதியமைத்த நெடுந்தீவு பிரதேச சபை தற்போது அதன் புனிதத்தை கெடுக்கும் விதமாக செயற்படுகின்றது எனவும் குறித்த நினைவாலயத்தை நெடுந்தீவு மக்கள் சார்ந்த பொதுக்கட்டமைப்பிடம் கையளிக்க பிரதேச சபை முன்வர வேண்டும் எனவும் இறந்தவர்களின் உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-இ)

## ஆலயத்தின் ஓடு பிரித்து பொருள்கள் திருட்டு

கொடிகாமம்,மே 16

நாவற்குழி சித்திர வேலாயுதர் ஆலயத்தின் ஓடு பிரித்து அதனூடாக உட்சென்ற திருடர்கள் ஆலயத்தில் இருந்த சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. காலை வேளை ஆலயத்துக்குச் சென்ற நிர்வாகத்தினர் ஓடு பிரிக்கப்பட்டு உட்கதவின் பூட்டுகள் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டமையை அவதானித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. ஆலயத்துக்கு வருகை தந்து பார்வையிட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ஐ-159)



## கொரோனா கட்டுப்பாடு தீவிரம்

பருத்தித்துறை,மே 16

கொரோனா பரவல் தீவிரம் பெற்றுள்ள நிலையில் பருத்தித்துறை கடற்கரையோரத்தில் கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதார பகுதியினர் தமது கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-159)

## அச்சுவேலி நகரப் பகுதியில் விசிறப்பட்டது தொற்று நீக்கி

யாழ்ப்பாணம், மே 16

அச்சுவேலி நகரில் இராணுவத்தினரால் நேற்றுக் காலை கிருமித்தொற்று நீக்கம் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டன. யாழ் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா வின் வழிகாட்டுதலில் ராணுவத்தின் 51 ஆவது படைப்பிரிவு தளபதியின் வழிகாட்டுதலின் கீழ் இராணுவத்தின் 521 ஆவது பிரிகேட் படைப்பிரிவினரால் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அச்சுவேலி நகரப்பகுதிச் சந்தை நீர் ஊற்றி சுத்தம் செய்யப்பட்டு கிருமி தொற்று நீக்கி விசிறப்பட்டது (ப-26)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முடக்கத்தால் பாதிக்கப்பட்ட
# அன்றாடம் தொழிலில் ஈடுபடுவோருக்கு 10 ஆயிரம் ரூபா அரசு வழங்க வேண்டும்
### செல்வம் எம்.பி. கோரிக்கை



**மன்னார்,மே 16**

**பொது முடக்கத்தால் பாதிக்கப்படும் அன்றாடம் வேலைசெய்து ஜீவனோபாயம் நடத்தும் மக்களுக்கு அரசு பத்தாயிரம் ரூபா வழங்க வேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

நாட்டில் அதிகரித்துவரும் கொரோனாத் தொற்றுக் காரணமாக 3 நாள்கள் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

பயணத் தடை விதித்துள்ள இந்த மூன்று நாள்களிலும் அன்றாடம் வேலை செய்து வாழ்க்கை நடத்தி வரும் கடற்றொழிலாளர்கள். சிறு வியாபாரிகள் மற்றும் கூலித் தொழிலாளர்கள் என்று பெருமளவான பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அடையாளம் காணப்பட்டு இந்த மூன்று நாள்களுக்கும் 10 ஆயிரம் ரூபா ரூபா வீதம் வழங்குவதற்கு இந்த அரசு முன் வரவேண்டும்.

இந்த பொது முடக்க பயணத் தடை நீடிக்குமாக இருந்தால் நாட்டில் உள்ள அனைத்து வித மான மக்களும் பட்டினிச் சாவை எதிர்கொள்ள நேரிடும் என்பதையும் அரசு புரிந்து கொ[illegible] அதற்கேற்ற வகையில் வி[illegible] நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் - என்றார். (ஐ-213)





வெளியான உயர்தர பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் கலைப் பிரிவில் முதலாவது மற்றும் நான்காம் இடங்களைப் பெற்ற மடுக்கரை கிராமத்து மாணவிகளது வீட்டுக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். இதன்போது நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர் ஜொனி சகாய ராஜனும் உடன் இருந்தார். (ஐ-213)

# யானை தாக்கி இளைஞர் காயம்

மன்னார்,மே 16

காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி இளைஞன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பருப்புக்கடந்தான் பகுதியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மடுக்கரை கிராமத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரே யானையின் தாக்குதலில் காயமடைந்த நிலையில் பள்ளமடு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

குறித்த இளைஞர் பெரிய மடு பகுதியில் உள்ள தனது தோட்டத்தை பார்வையிட்டு பின் மீண்டும் வீடு நோக்கி மோட்டார் சைக்கிலில் சென்றுள்ளார்.

இதன்போது பருப்புக்கடந்தான் கட்டுக்கரை குள வீதியூடாக பயணித்துக் கொண்டிருந்தவேளை வீதியில் மறைந்திருந்த காட்டு யானை இளைஞனை தாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-56)



# யானையின் தொடர் தாக்குதல்; வவுனியாவில் மக்கள் அச்சம்



வவுனியா, மே 16

வவுனியாவில் யானையின் தாக்குதல் காரணமாக பயன் தரும் மரங்கள் மற்றும் விளைபொருள்கள் சேதமடைந்துள்ளன என்று கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

வவுனியா ஆச்சிபுரம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கற்குளம் கிராமத்துக்கு அருகிலுள்ள காட்டுப் பகுதியிலிருந்து கிராமத்துக்குள் நுழையும் காட்டு யானை மக்களின் பயன்தரு மரங்களையும், விளைபொருள்களையும் அழித்து சேதப்படுத்தி வருகின்றது.

இரவு நேரங்களில் கற்குளம் 02, கற்குளம் 03 மற்றும் கற்குளம் 04 ஆகிய கிராமங்களுக்குள் செல்லும் குறித்த யானை தொடர்ச்சியாக சேதங்களை ஏற்படுத்தி வருகின்றது. கற்குளம் கிராமத்துக்கு அருகாமையிலுள்ள காட்டுப்பகுதியில் யானை இல்லை, கிராமத்தில் சேதத்தை ஏற்படுத்தும் குறித்த யானையானது, வேறு இடத்திலிருந்து கொண்டுவந்து எமது கிராமத்தின் காட்டுப்பகுதியில் விடப்பட்டுள்ளது என்றனர்.

அண்மைக்காலமாக குறித்த யானையின் அட்டகாசம் கற்குளம் கிராமத்தில் அதிகரித்துள்ளதால் கிராம மக்கள் தங்கள் தூக்கத்தையும் இழந்து அச்சநிலையில் பரிதவித்து வருகின்றனர். அத்தோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தலையி[illegible] யானைப் பிரச்சினைக்கு உடனடி தீர்வைப்பெற்று[illegible] மாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-110)

# 728 பி.சி.ஆர் முடிகளுக்காக காத்திருக்கிறது மன்னார்

மன்னார், மே 16

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 390 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மேலும் 728 பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கான முடிவுகள் எதிர் பார்க்கப்பட்டுள்ளன என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 390 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த வருடம் ஜனவரி தொடக்கம் தற்போது வரை 373 கொரோனாத் தொற்றாளர்களும், மே மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் தற்போது வரை 31 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் இது வரை 3 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளன. இந்த மாதம் ஆயிரத்து 288 பி.சி.ஆர்.பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் 728 பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கான முடிவுகள் எதிர்பார்க்கப்பட்டுள்ளன. மேலும் காய்ச்சலுடன் மூச்சு எடுப்பதில் சிரமம் அல்லது சுவாச குணங்குறிகளுடன் மூச்சு எடுப்பதில் சிரமம் காணப்பட்டால் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனையை நாடுமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொள்ளப்படுகிறது - என்றார். (ப-56)



# திடீரென தீப்பற்றியது ஓட்டோ சேதமின்றித் தப்பினார் சாரதி

மன்னார், மே 16

மன்னார் உப்புக்குளம் புதிய தெரு பகுதியூடாகப் பய ணித்துக் கொண்டிருந்த முச்சக்கரவண்டி ஒன்று நேற்று சனிக்கிழமை காலை திடீர் என தீப்பிடித்து எரிந்துள்ளது. எனினும் குறித்த முச்சக்கர வண்டியை செலுத்திச் சென்றவர் அதிலிருந்து பாய்ந்து சேதங்கள் இன்றி தப்பியுள்ளார். எனினும் குறித்த முச்சக்கர வண்டி முழுமையாக தீப் பிடித்து எரிந்துள்ளது. (ப-56)

### வவுனியாவில்
# பொலிஸார் தீவிர கண்காணிப்பில்





நாடு பூராகவும் பயணத்தடை அறிவிக்கப்பட்டுள்ள நிலையில்; வவுனியாவில் பொலிஸார் தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அரசாங்க அறிவுறுத்தல்களை மீறி வீதியில் நடமாடுவோரை மறித்து சோதனை செய்யும் பொலிஸார் அநாவசியமாக வெளியில் வருவோரை கடுமையாக எச்சரித்து அவர்களை திருப்பி அனுப்பி வருகின்றனர். இதே வேளை, அரச பயணக் கட்டுப்பாடுகளை மீறி செயற்படுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் எச்சரித்துள்ளனர். (ஐ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த தலைவர் இல்லாததால் நாட்டு மக்களுக்கு நெருக்கடி

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



**கொழும்பு, மே 16**

**மக்களின் பிரச்சினைகள் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கக்கூடிய தலைவர் ஒருவர் இல்லாததன் காரணமாகவே, மக்கள் இன்று பெரும் நெருக்கடி நிலைமையை எதிர்கொண்டுள்ளனர்.**

இவ்வாறு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

காணொலி ஊடாக விசேட அறிவித்தலை விடுத்துள்ள அவர் மேலும் தெரிவிக்கையில்:

கொவிட் 19 வைரஸ் பரவல் காரணமாக நாடு பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. தடுப்பூசி பற்றாக்குறை காரணமாக மக்கள் நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளனர். பொருளாதாரமும் வீழ்ச்சியடைந்துள்ளது.

அதனால் சாதாரண மக்களின் பொருளாதார நிலைமைக்கு சக்தியாக அரசு செயற்பட வேண்டும்.

இதேவேளை, சிறிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளுக்கான வங்கிக் கடன்கள் மற்றும் வாகனக் காப்புறுதிகளைச் செலுத்துவதற்காக வழங்கப்பட்ட கால அவகாசத்தை மேலும் நீடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மக்களின் பசியைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

எதிர்க்கட்சி என்ற வகையில் நிதி ஒதுக்கீடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதிலும் மக்களுக்கு நிவாரணங்கள் பெற்றுக்கொடுக்கப்படுகின்றனவா? என்பவை தொடர்பிலும் நாம் அவதானமாக இருக்கின்றோம். -என்றார். (த-4)

---

# கைதிகளின் உறவுகளுக்காக தகவல் நிலையம் அமைப்பு

கொழும்பு, மே 16

கொரோனாத் தொற்றுக் காரணமாக சிகிச்சை பெற்று வரும் கைதிகள் தொடர்பான விவரங்களை, அவர்களின் உறவினர்கள் தெரிந்துகொள்வதற்கு, தகவல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர், சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைவாக கைதிகளின் குடும்பத்தினர் 011 4677101 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து விவரங்களை அறிந்துகொள்ள முடியும். தொற்றுக்குள்ளான கைதிகள் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ள இடம், சேர்க்கப்பட்ட தினம் மற்றும் அவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட தினம் உள்ளிட்ட விவரங்களை உறவினர்கள் அறிந்துகொள்ள முடியும்.

அத்துடன் கைதிகள் இறுதியாக சிறை வைக்கப்பட்டிருந்த சிறைச்சாலைகளிலும் அந்த விவரங்களை அறிந்துகொள்ளமுடியும்.

prison.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரவேசித்து, தொடர்புகொள்ள வேண்டிய சிறைச்சாலையின் தொலைபேசி இலக்கங்களை அறிந்துகொள்ள முடியும் -என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-4)

---

# நாட்டை முழுமையாக முடக்குவதே ஒரே வழி

## ரணில் மீண்டும் வலியுறுத்து



கொழும்பு.மே 16

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு, நாட்டை முழுமையாக முடக்குவதைத் தவிர மாற்றுத் தீர்வு எதுவும் இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

எதிர்வரும் சில வாரங்களில் கொவிட் வைரஸ் இலங்கையில் மிக வேகமாக பரவும் என்று மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். இதனைக் கட்டுப்படுத்துவதற்கு நாட்டை முழுமையாக முடக்க வேண்டும் என்று சுகாதாரத் தரப்புக்கள் பரிந்துரைத்தால், அதனை நடைமுறைப்படுத்துவது அரசின் கடமையாகும்.

பொருளாதாரத்தில் வீழ்ச்சி ஏற்பட்டால் அதனை மீளக் கட்டியெழுப்ப முடியும். ஆனால் மக்களின் உயிருக்குப் பாதிப்பு ஏற்பட்டால் அதனை ஈடுசெய்ய முடியாது.

இலங்கையில் தடுப்பூசித் தட்டுப்பாடு நிலவுகிறது என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். எனவே அனைவரும் வைரஸ் தொற்றிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

மருத்துவ ஆலோசனைகளுக்கமைய தீர்மானங்களை எடுப்பதே அரசின் பொறுப்பாகும். - என்றார். (த-4)

---

# மக்கள் உயிருக்குப் போராட்டம் அரசு கொள்ளையில் மும்முரம்!

## மக்கள் விடுதலை முன்னணி குற்றச்சாட்டு

கொழும்பு, மே 16

கொரோனாத் தொற்றால் மக்கள் உயிரைப் பாதுகாப்பதற்குப் போராடுகின்றனர். ஆனால் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் அரசோ நாட்டின் வளங்களைப் பயன்படுத்திக் கொள்ளையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறு, மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய அமைப்பாளர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

முன்னணியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

கொவிட்19 வைரஸ் பரவல் காரணமாக நாட்டு மக்கள் தமது பாதுகாப்பு குறித்து அச்சமடைந்துள்ளனர். இவ்வாறான சூழலில் அரசு கொழும்பு துறைமுக நகர பொருளாதார [illegible] வரைவை நிறைவேற்றிக்கொள்ள முயற்சிக்கிறது.

அது மாத்திரமின்றி ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு வித்தியாலயத்தை உருவாக்குவது தொடர்பான சட்ட வரைவும் எவ்வித அறிவித்தலும் இன்றி பிரதமரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ராஜபக்ச அரசு கொள்ளையர்களைப் போன்றே செயற்பட்டு வருகின்றது.

மக்களின் அவதானம் திசை திரும்பியுள்ள சந்தர்ப்பத்தில், அரசு தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முயற்சிக்கிறது.

ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு வித்தியாலயம் அமைக்கப்படுவது, அரசியல் தலைவர்களது பிள்ளைகளினதோ, நாட்டிலுள்ள தனவந்தர்களின் பிள்ளைகளினதோ கற்றல் செயற்பாடுகளுக்காக அல்ல.

ஆனால் இந்த உயர் கல்வி நிலையமானது வணிக நோக்கம் கருதியே உருவாக்கப்படவுள்ளது.

உயர்நிலை கல்வித்துறைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான இத்தகைய செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும். -என்றார். (த-4)

---

# பசில் நலமுடன்

## வதந்தி பரப்பாதீர்

### என்கிறார் நாமல்

கொழும்பு, மே 16

அமெரிக்காவில் மருத்துவ சிகிச்சை பெறும் அளவுக்கு பசில் ராஜபக்ச சுகவீனமடையவில்லை. அவர் நலமுடன் இருக்கின்றார். எனவே வீண் வதந்திகளைப் பரப்பாதீர் என்று இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

பொருளாதார, புத்தாக்கம் மற்றும் வறுமை ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ச அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார். அவர் அமெரிக்காவில் மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதற்காகச் சென்றுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதற்குப் பதிலளித்த நாமல், கடந்த 11 ஆம் திகதி நான் அவரைச் சந்தித்தபோது அவர் நலமுடன் இருந்தார். அவர் தனது தனிப்பட்ட தேவை கருதியே அமெரிக்கா சென்றுள்ளார்.

அவர் அமெரிக்கப் பயணத்தை நிறைவு செய்து இன்னும் ஓரிரு வாரங்களில் நாடு திரும்புவார். -என்றார். (த-4)

---

# தெற்கு அதிவேக வீதியின் நுழைவாயில்கள் திறப்பு

கொழும்பு, மே 16

தெற்கு அதிவேக வீதியின் கொட்டாவ மற்றும் கடுவல பகுதிகளிலுள்ள 8 நுழைவாயில்கள் மீளத் திறக்கப்பட்டுள்ளன.

கடுவல பகுதியிலுள்ள உட்பிரவேசிக்கும் 2 நுழைவாயில்களும், வெளியேறும் 2 நுழைவாயில்களும் , கொட்டாவ பகுதியிலுள்ள உட்பிரவேசிக்கும் 2 நுழைவாயில்களும், வெளியேறும் 2 நுழைவாயில்களும் திறக்கப்பட்டுள்ளன என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (த-4)

---

# கட்டுப்பாடுகளை மீறாதீர்கள்; வீட்டிலேயே தங்கியிருங்கள்

## பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, மே 16

தற்போது நடைமுறையில் உள்ள பயணக் கட்டுப்பாடுகளை எவரும் மீற வேண்டாம். முடிந்தவரை வீட்டில் தங்கியிருங்கள். பொலிஸாரின் கண்காணிப்புத் தொடரும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தவே தற்போது பயணக் கட்டுப்பாடுகள் [illegible] அதற்கமைவாக மக்கள் [illegible] தங்கியிருக்க வேண்டும். இயலாதவர்கள் மருத்துவமனைகளுக்குச் செல்வதற்கு அனுமதி உள்ளது. அத்துடன் அடையாள அட்டையைப் பயன்படுத்தி இன்றும் மக்கள் வெளியேற முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில், கடந்த 24 மணித்தியாலங்களில் 253 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அதற்கமைவாக கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் 9 ஆயிரத்து 282 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கத்தையே தகர்த்தெறிந்துள்ளனர்

## சந்திரகுமார் கவலை

கிளிநொச்சி, மே 16

இந்த நாட்டில் நிலைத்திருக்கக் கூடிய சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தி அனைத்து இன மக்களும் நிம்மதியாக வாழும் சூழலை ஏற்படுத்த வேண்டும். அதற்கு மாறாக இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை தகர்க்கும் வகையிலும், காயப்பட்டுள்ள ஒரு இனத்தின் உணர்வுகளை சிதைக்கும் வகையிலும் முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் உடைக்கப்பட்டுள்ளது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிலைமாறுகால நீதிப் பொறிமுறையிலும் நினைவு கூரல் வலியுறுத்தப்பட்டுள்ளது. இலங்கை அரசும் ஏற்றுக்கொண்டுள்ளது. இவற்றுக்கு மாறாக ஒரு இனத்தின் ஆன்மாக்களை உடைத்து தகர்ப்பது போன்று முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னங்கள் உடைக்கப்பட்டமை மிகவும் வேதனைக்குரியதும், கண்டனத்துக்குரியதுமாகும்.

நினைவு கூர்வதன் மூலம் மனக்காயங்களை ஆற்றிக் கொள்ள முடியும். இன்றைய சூழலில் காயங்கள் ஆற்றப்படுவது அவசியமானது. அவற்றுக்கு நினைவுகூருதல் மிகவும் இன்றியமையாதது.

குருந்தூர்மலையில் கொரோனா சுகாதார நடைமுறைகளை மீறி இராணுவத்தின் பாதுகாப்புடன் நிகழ்வுகளை நடாத்த முடியும் என்றால் ஏன் மே 18 இல் முள்ளிவாய்க்காலில் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக போரில் கொல்லப்பட்ட அப்பாவியான தங்களது உறவுகளை தமிழ் மக்கள் நினைவுகூர முடியாது?

இன ரீதியான பாரபட்சத்தை கடந்து இனங்களின் உணர்வுகள் புரிந்துகொள்ளப்பட்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். தமிழ் மக்களின் நினைவு கூரும் உரிமையை எவரும் தடுக்கக்கூடாது- என்றார். (ஓ.214)

# ஜனநாயக வெளியைக்கூட தடைகளால் நசுக்குகின்றனர்

## சுரேஸ் காட்டம்

யாழ்ப்பாணம், மே 16

**கொரோனா என்பது ஒருபக்கம் இருக்க, ஊர்வலங்களாக இருந்தாலும்சரி, உண்ணாவிரதங்களாக இருந்தாலும்சரி ஜனநாயக நெறிமுறைகளுக்கு உட்பட்டு சிறிய பெரிய போராட்டங்களை முன்னெடுப்பதாக இருந்தாலும்சரி உடனடியாகவே பொலிஸார் நீதிமன்றங்களை அணுகி தடையுத்தரவைப் பெறுவது வாடிக்கையாகிவிட்டது.**

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஸ் பிறேமச்சந்திரன்.

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி உடைப்பு மற்றும் நினைவேந்தலுக்கான தடையுத்தரவு தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒவ்வொரு வருடமும் பொது மக்களை நினைவுகூர்வதாக இருந்தாலும் சரி, போராளிகளை நினைவுகூருவதாக இருந்தாலும் சரி பலத்த போராட்டத்தின் மத்தியிலேயே நினைவுகூருதலை செய்ய வேண்டியிருக்கின்றது.

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த எமது மக்களை நினைவுகூர்வதற்கெதிராகவும் நீதிமன்ற தடையுத்தரவுகளையும் பொலிஸார் பெற்றுள்ளனர். அது மாத்திரமல்லாமல், இறந்த மக்களை நினைவுகூரும் முகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒரு சிறிய நினைவுச் சின்னம்கூட அரச இயந்திரத்தால் உடைத்தெறியப்பட்டிருக்கின்றது. இராணுவம், பொலிஸ் உட்பட்ட அரச இயந்திரமானது மக்களின் உணர்வுகளை சிதைப்பதென்பது கண்டிக்கத்தக்கதும் அநாகரிகமானதுமாகும்.

அரசின் மனித உரிமைக்கெதிரான செயற்பாடுகளை கனேடிய தூதுவர் கண்டித்திருப்பதை நாங்கள் வரவேற்பதுடன், ஏனைய நாடுகளும் மனித உரிமை அமைப்புகளும் செயற்பாட்டாளர்களும் இலங்கை அரசின் இத்தகைய நடவடிக்கைகளைக் கண்டிக்க முன்வரவேண்டும் என்பதுடன் நினைவுகூரல் நிகழ்வுகள் எவ்விதமான அரச தலையீடுகளுமின்றி நடைபெறுவதற்கு அரசுக்கு தமது அழுத்தங்களை உயர்மட்ட அளவில் பிரயோகிக்க வேண்டும்- என்றுள்ளது. (ஒ.இ)

# இனவாதத்தின் அகோர முகத்தின் வெளிப்பாடு

## அரியநேந்திரன் காட்டம்



மட்டக்களப்பு, மே 16

முள்ளிவாய்க்கால் நினைவுச்சின்னத்தை சேதப்படுத்தியதன் ஊடாக இனவாதத்தின் கோர முகத்தை அரசு வெளிக்காட்டியுள்ளது. இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஊடகச் செயலருமான பா.அரியநேந்திரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

நினைவுத்தூபியில் இருந்த 'ஏந்தியகைகள்' அடையாளத்தை சேதப்படுத்தி இலங்கை நாட்டின் இனவாதம் மீண்டும் ஒருமுறை சர்வதேசத்துக்கு உணர்த்தியுள்ளது. தூபியைச் சேதப்படுத்தியுள்ளமையை நோக்கும்போது இனவாத அகோர முகம் இந்தச் செயலை செய்துள்ளமை கோடிட்டு காட்டப்படுகிறது. கொரோனா வைரஸ் பரவலால் முள்ளிவாய்க்காலில் ஆயிரக்கணக்கானவர்கள் இந்தத் தடவைகூட முடியாது என்பது எல்லோரும் அறிந்த விடயம். அவ்வாறான நிலையில் இவ்வாறான மனித நேயமற்ற செயலானது பல தமிழ் நெஞ்சங்களில் மனத்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒரே நாடு ஒரே சட்டம் என்று கூறப்பட்டாலும், வடக்கு கிழக்கில் வேறு விதமாகவே சட்டங்கள் உள்ளனவா என்ற கேள்வியும் தொடராக எழுந்துள்ளது. சர்வதேசம் இதனை புரிந்துகொள்ள வேண்டும்- என்றுள்ளது. (ஒ.இ)

# முள்ளிவாய்க்கால் விடயத்தில் மாத்திரமா நாட்டின் மீது பொலிஸாருக்கு அக்கறை?

## ரவிகரன் காட்டம்



முல்லைத்தீவு, மே 16

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையில்அமைந்துள்ள தமிழர்களின் பூர்வீக நிலமான குருந்தூர்மலையில் சுகாதார நடைமுறைகளை மீறி சிங்களவர்கள் பௌத்த விழா எடுக்கும்போது வேடிக்கைபார்த்துக்கொண்டிருந்த முல்லைத்தீவு பொலிஸாருக்கு, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் விடயத்தில் மாத்திரம் நாட்டின்மீது அக்கறை ஏற்பட்டுள்ளதா? என வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்று (நேற்று) காலை 10.30மணியளவில் எனது இல்லத்துக்கு வந்து, முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றால் வழங்கப்பட்ட நீதிமன்றக் கட்டளையை என்னிடம் தந்துள்ளார்.

குறிப்பாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பாக, முள்ளிவாய்க்கால் பிரதேசத்திலோ, அல்லது முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களிலோ எந்தவித கூட்டங்களோ அல்லது நினைவேந்தல் நிகழ்வுகளையோ நடத்தவே கூடாதென, அந்தத் தடைக்கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை கொரோனாக் காலத்தில் இவ்வாறான கூட்டங்கள் அல்லது நினைவேந்தல்கள் செய்வது பிழையானது எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதில் நீதிவான் நீதிமன்றம் வழங்கியுள்ள கட்டளையை நாம் ஏற்கின்றோம். அதனை நாம் மதிக்கின்றோம்.

இதேவேளை இதே முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருந்தூர் மலையில், கடந்த 10ஆம் திகதியன்று சிங்கள பௌத்த துறவிகள், தொல்லியல்துறையினர், இராணுவத்தினர் எனப் பலரும் ஒன்றுகூடி, அங்கு பெருமளவில் பௌத்த விழா ஒன்றை சுகாதார நடைமுறைகளை மீறி முன்னெடுத்திருந்தனர். இதனைக் கண்டுங்காணாதவர்களாக முல்லைத்தீவு பொலிஸார் இருந்தனர். ஆனால் படுகொலை செய்யப்பட்ட எமது உறவுகளை நினைந்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை மேற்கொள்ளும்போது, அவர்கள் இந்த நாட்டில் தாம் அக்கறை உடையவர்கள் என காண்பிக்கும் வகையில் இவ்வாறான நினைவேந்தல் நடவடிக்கைகளுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல்களைச் செய்கின்றனர். எனவே இந்த நினைவேந்தல் விடயத்துக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யும்போது, முல்லைத்தீவு பொலிஸாருக்கு இ[illegible] நாட்டின்மீது[illegible] அக்கறை, குருந்தூர் [illegible] பௌத்த விழாக்கள் [illegible] என்றார். (ப-246)

# மக்களின் உணர்வோடு விளையாடுகின்றார்கள்

## சிறிநேசன் சீற்றம்

மட்டக்களப்பு, மே 16

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்தழிக்கப்பட்டிருக்கின்றது. இன்று எமது மக்களின் உணர்வுகளோடு விளையாடுகின்ற செயற்பாடு நடைபெறுகின்றது. இதன் மூலம் எம்மை அடக்கி, ஒடுக்கி, முடக்க முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

முள்ளிவாய்க்கால் வடுவின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபி திட்டமிட்ட வகையில் உடைக்கப்பட்டிருக்கின்றது.

இது தமிழ் மக்கள் மனங்களில் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போன்றும், தொடர்ந்தும் அவர்களை துன்ப நிலைக்குள் வைத்திருக்கக் கூடிய விதத்திலும், எமது மக்களின் உரிமையோடு விளையாடுகின்ற செயற்பாடாகவுமே அமைந்திருக்கின்றது. ஜனநாயக நாட்டில் மறைந்த, கொல்லப்பட்டவர்களை நினைவுகூருவதற்கான உரிமை இருக்கின்றது. மக்கள் விடுதலை முன்னணியினர் அவர்களது போராளிகளை நினைவுகூருகின்றார்கள். நினைவுத் தூபிகளையும் தென்பகுதிப் பல்கலைக்கழகங்களில் அமைத்திருக்கின்றார்கள். அவ்வாறிருக்கும் போது எமது வடக்கு கிழக்கு பகுதிகளில் நினைவகங்கள் உடைக்கப்பட்டிருக்கின்றமை மிகவும் வேதனையான விடயம். மிக வேதனையோடு கண்டிக்கின்றோம். - என்றுள்ளது. (ஒ.150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றி யோசித்த தம்பதியர்



திருமணம் என்றாலே காலம் காலமாக பெண்ணின் கழுத்தில் மாப்பிள்ளை தாலி கட்டுவது அல்லது அணிவிப்பது தான் வழக்கமாக இருந்து வருகிறது. ஆனால் சில மாதங்களுக்கு முன் நடைபெற்ற ஒரு காதல் ஜோடியின் திருமணம் இன்னும் இணையத்தில் விவாத பொருளாக இருந்து வருகிறது. ஷார்துல் கதம் - தனுஜா என்ற ஜோடியின் திருமணத்தில் நடைபெற்ற வினோத நிகழ்வு தான், நெட்டிசன்களின் கடும் விமர்சனத்துக்கு ஆளாகியுள்ளது. திருமணத்தின்போது பெண்ணின் கழுத்தில் மாப்பிள்ளை தாலி அணிவிப்பதுதான் வழக்கம். ஆனால் பாலின சமத்துவத்தின் முக்கியத்துவத்தை பிறருக்கு உணர்த்தும் வகையில் இந்த வழக்கத்தை இந்தத் திருமணத்தின்போது மாற்றியுள்ளார் ஷார்துல். அதன்படி ஷார்துல் தனது துணையான தனுஜாவின் கழுத்தில் தாலியை அணிவித்ததோடு மட்டுமல்லாமல், தன் கழுத்தில் தனுஜாவைக் கொண்டு தாலியை அணிவிக்கச் செய்துள்ளார். இந்தத் திருமண நிகழ்வை சமூக வலைத் தளங்களில் நெட்டிசன்கள் விமர்சித்து வருகின்றனர்.










# சமையல் நிகழ்ச்சியின் தொகுப்பாளராக விஜய் சேதுபதி



சன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகவுள்ள சமையல் நிகழ்ச்சியின் தொகுப்பாளராக விஜய் சேதுபதி பணியாற்றவுள்ளார். தமிழ்த் திரையுலகின் முன்னணி நடிகராக வலம் வருபவர் விஜய் சேதுபதி. தற்போது தெலுங்கு, இந்தி, மலையாளம் உள்ளிட்ட மொழிகளிலும் சில படங்களில் நடித்து வருகிறார். எப்படி அனைத்து மொழிகளிலும் மாறி மாறி நடித்துக்கொண்டே இருக்கிறார் என்று பலரும் ஆச்சரியப்படுகிறார்கள்.

இந்நிலையில், தற்போது சன் டிவியில் ஒளிபரப்பாகவுள்ள சமையல் நிகழ்ச்சியின் தொகுப்பாளராக பணிபுரியவுள்ளார் விஜய் சேதுபதி. இதற்கான ப்ரோமோவை வெளியிட்டுள்ளது சன் தொலைக்காட்சி.

# சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 3 | | | | | | |
| | | | | | | 9 | [illegible] | |
| | 7 | | 4 | | | | | 1 |
| | | 8 | | | | 1 | 7 | |
| | | | 7 | 4 | 5 | | | |
| | 6 | 2 | | | | 9 | | |
| 2 | | | | | 4 | | 5 | |
| | | 5 | 8 | | | | | |
| | | | | | | [illegible] | 1 | 8 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 2 | 7 | 6 | 9 | 3 | 5 | 8 |
| 8 | 6 | 7 | 3 | 5 | 4 | 1 | 2 | 9 |
| 9 | 5 | 3 | 8 | 2 | 1 | 6 | 4 | 7 |
| 3 | 4 | 1 | 9 | 7 | 2 | 8 | 6 | 5 |
| 2 | 7 | 5 | 6 | 1 | 8 | 9 | 3 | 4 |
| 6 | 9 | 8 | 4 | 3 | 5 | 7 | 1 | 2 |
| 1 | 3 | 4 | 2 | 9 | 7 | 5 | 8 | 6 |
| 7 | 8 | 6 | 5 | 4 | 3 | 2 | 9 | 1 |
| 5 | 2 | 9 | 1 | 8 | 6 | 4 | 7 | 3 |

**விதி1:** ஒன்பது சிறு கட்டங்கள் அடங்கிய ஒவ்வொரு சதுர அறையிலும் 1 முதல் 9 வரையுள்ள எல்லா எண்க ளும் ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இப்படியாக இதே விதி அமையுமாறு சட்டகத்திலே உள்ள எல்லா அறைகளும் (9 அறைகள்) அமைய வேண்டும்.

**விதி2:** சட்டகம் முழுவதிலும் ஒவ்வொரு வரிசையிலும் (கிடையிலும்) எண்கள் 1 முதல் 9 வரையில் உள்ள எண்கள் ஒருமுறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இதே போல ஒவ்வொரு நெடையிலும் எண்கள் 1 முதல் 9 வரை ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும்.

# இன்றைய நாள்

**மேடம்:** பணியில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். மன நிம்மதி கிடைக்கும். செலவுகள் குறைந்து நிம்மதியோடு இருப்பீர்கள். செல்வம் சேரும்.

**இடபம்:** தந்தையிடமிருந்து நல்ல ஆலோசனைகளை பெறுவீர்கள். மற்றவர்களுக்கு நன்மை செய்வதால் சந்தோஷம் கிடைக்கும், வீடு, மனை வாங்கும் திட்டம் மனதில் ஏற்படும்.

**மிதுனம்:** முன்னோர்களின் ஆசியும், மகான்களின் ஆசியும் கிடைக்கும். பொறுமை கூடும். பணியில் கூடுதல் ஈடுபாடு ஏற்படும். உங்களின் பயணத் திட்டத்தில் மாற்றம் செய்ய வாய்ப்புள்ளது.

**கடகம்:** சுகபோகங்கள் ஏற்படும். புதிய பொருள்களின் சேர்க்கை உண்டு. பொது வெளியில் உங்கள் திறமை வெளிப்படும். மன நிம்மதி கூடும். குடும்பதில் சந்தோஷமான சூழல் உண்டு.

**சிம்மம்:** எதிர்பாராத நன்மைகள் உண்டு. பெரியவர்களின் ஆசி கிடைக்கும். பெரியவர்களின் தரிசனம் கிடைக்கும். புதிய விஷயம் கற்பீர்கள். தாமதம் நீங்கும்.

**கன்னி:** சமீபத்திய வெற்றி மன நிறைவும் திருப்தியும் தரும். பயணங்கள் மேற்கொண்டு அதன்மூலம் நன்மை அடைவீர்கள். உங்களின் முயற்சிகள் வெற்றியை நோக்கிச் செல்லும்.

**துலாம்:** இன்று அலுவலகத்தில் இருந்து நற்செய்தி வந்து சேரும். செலவு கூடும் என்பதால் கவனம் தேவை. வாகன யோகம் உண்டு. பெரிய முடிவு எடுப்பதில் கவனமாக இருப்பது அவசியம்.

**விருச்சிகம் :** இளைஞர்களுக்கு முன்னேற்றமும், பாராட்டும் கிடைக்கும். பணியாளர்களுக்கு பேச்சிலும், செயலிலும் நிதானம் தேவை. காலையில் ஏற்படும் கவலை மாலையில் தீரும்.

**தனுசு:** காலை நேரம் சாதகமில்லாமல் இருக்கும். மாலையில் மகிழ்வீர்கள். குடும்பத்தில் இனிய சம்பவம் ஒன்று நடக்கும். தாயார் நலமடைவார். இன்று சவால் ஒன்றைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

**மகரம்:** கணவன் மனைவி இடையே விட்டுக்கொடுத்து செல்வது நல்லது. போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவீர்கள். மகிழ்ச்சி கூடும். மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்காதீர்கள்.

**கும்பம்:** கோபத்தை குறைப்பது அவசியம். கலை ஆர்வம் கூடும். பெரியோர், மேலதிகாரிகளின் ஆதரவை இன்று பெறுவீர்கள். பிள்ளைகளுக்கு அரசாங்கத்தின் மூலம் நன்மை கிடைக்கும்.

**மீனம்:** நிதி இருப்பு திருப்திகரமாக இருக்கும். நட்பு வட்டம் விரியும். கடன்கள் தீர ஆரம்பிக்கும். நீண்ட கால பிரச்சினைகள் முடிவுக்கு வரும். தொழில் சிறப்படையும். பேச்சில் கவனம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# 2,56,004 பேருக்கு கோவிஷீல்ட்

கொழும்பு, மே 16
ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா கோவிஷீல்ட் தடுப்பூசி இலங்கையில் 2 லட்சத்து 56 ஆயிரத்து 4 பேருக்கு முழுமையாகச் செலுத்தப்பட்டுள்ளது என்று தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.
அதற்கமைவாக இந்தத் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமையும் 11 ஆயிரத்து 385 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளது.
அதேவேளை சைனோஃபோர்ம் தடுப்பூசி 2 லட்சத்து 76 ஆயிரத்து 762 பேருக்கும், ரஷ்யாவின் ஸ்பூட்னிக் வி தடுப்பூசி 14 ஆயிரத்து 673 பேருக்கும் செலுத்தப்பட்டுள்ளது என்று தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. (த-4)

# கொழும்பு துறைமுக நகரம் ரணில், மங்கள கலந்தாய்வு

கொழும்பு. மே 16
கொழும்பு துறைமுக நகரம் தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை கலந்துரையாடப்படவுள்ளது.
இந்தக் கலந்துரையாடலுக்கு நாடாளுமன்றைப் பிரதிநிதித்துவம் செய்யும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் பலரும் அழைக்கப்பட்டுள்ளனர்.
இணையம் வழி ஊடாக இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில், துறைமுக நகரை இலங்கைக்கு பொருளாதார நன்மைகளைப் பெற்றுக்கொடுக்க கூடிய தொன்றாக மாற்றுதல் மற்றும் நாடாளுமன்ற விவாதத்தை எதிர்கொள்ளுதல் உள்ளிட்ட ஆலோசனைகள் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

# கொவிட்டை ஒடுக்க விசேட குழுக்கள்!



## எதிர்க்கட்சி வலியுறுத்து

**கொழும்பு, மே 16**
**நாட்டில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு, ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சி தலைவர் தலைமையில், ஆளும் மற்றும் எதிர்த்தரப்பு உறுப்பினர்களை உள்ளடக்கிய விஷேட குழுவொன்றை நியமிக்க வேண்டும்**

என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா வேண்டுகோள் விடுத்துள்ளார்.
கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
2005 ஆம் ஆண்டின் அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் கீழ், விஷேட குழுவொன்றை நியமித்து வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். எனவே, அந்தச் சட்டத்துக்கு ஏற்ப குழுவை நியமித்து துரித நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அரசை வலியுறுத்துகின்றோம்.
அத்துடன் சுகாதாரத்துறை நிபுணர்களைப் புறந்தள்ளி, அரசியல் ரீதியான தீர்மானங்களுக்கமையவே செயற்பட்டால் நாடு மேலும் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்படும். பிரேசிலில் வைரஸ் பரவல் ஆரம்பித்த காலத்தில் அந்த நாட்டு சுகாதார அமைச்சர் கூறியவற்றைக் கவனத்தில் கொள்ளாததோடு, அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, இராணுவ அதிகாரியொருவர் சுகாதார அமைச்சராக நிய மிக்கப்பட்டார். அதன்பின்னர் தற்போதுவரை பிரேஸில் கடும்பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. இதே நிலைமை இலங்கையிலும் ஏற்படாமல் தடுக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும். என்றார். (த-4)

# இறப்புக்களுக்கு அரசே பொறுப்பு

கொழும்பு, மே 16
நாளாந்தம் 20 உயிரிழப்புகள் பதிவாகிக் கொண்டிருக்கின்றபோதும், நா[illegible]க்குவதற்கு அரசு எந்தத் தீர்மானத்தையும் எடுக்கவில்லை. இவ்வாறு பதிவாகும் ஒவ்வோர் உயிரிழப்புக்கும் அரசே பொறுப்புக் கூற வேண்டும்.



இவ்வாறு. ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டில் நாளொன்றுக்கு 20 பேர் கொவிட் தொற்றால் உயிரிழந்தால், மாதத்துக்கு 600 இறப்புக்கள் பதிவாகக்கூடும்.
கொவிட் தடுப்பூசி வழங்கல் தொடர்பில் முறையானதொரு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாமையின் காரணமாகவே. இன்று 800 க்கும் அதிகமான கொவிட் தொற்றாளர்கள் உயிரிழந்துள்ளனர். எனவே, இந்த உயிரிழப்புகளுக்கு அரசே பொறுப்புக் கூற வேண்டும்.
நாட்டில் தற்போது காணப்படுகின்ற கொவிட் அச்சுறுத்தலுக்கு மத்தியில் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைவை நிறைவேற்றிக் கொள்வதிலேயே அரசு ஆர்வமாகவுள்ளது. துறைமுக நகர சட்ட வரைவை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் அபாய நிலையிலுள்ள போதிலும்கூட நாட்டை முடக்கவில்லையா என்ற சந்தேகம் எழுகின்றது.
அவ்வாறெனில், அடுத்தவாரம் இந்த வரைவு நிறைவேற்றப்பட்டால் அதன் பின்னர் நாட்டை முடக்கக்கூடிய வாய்ப்புள்ளது. என்றார். (த-4)

# தொற்று தொடர்பில் மாறுபட்ட தகவல்கள்!

## நாட்டுக்கே அச்சுறுத்தலென எச்சரிக்கை

கொழும்பு, மே 16
கொரோனாத் தொற்று தொடர்பாக மாறுபட்ட தகவல்கள் வெளியிடப்படுகின்றன. அதனால் நாடு பெரும் அச்சுறுத்தலுக்கு முகங்கொடுத்துள்ளது என்று மருத்துவ ஆய்வுகூட சேவை தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
எதிர்வரும் சில நாள்களில் நாடு மிக மோசமான நிலையை எதிர்கொள்ளப் போகின்றது. எனவே, கொரோனாத் தொற்றுத் தொடர்பான தகவல்களை உரியவாறு முகாமை செய்வது அவசியமாகும். தற்போது பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கான மாதிரிகளைப் பரிசோதிப்பதற்கான ஆய்வுகூட வசதிகள் அவற்றின் இயலுமையைக் கடந்துள்ளன.
அத்தோடு தொற்றைக் கண்டறிவதற்கு பி.சி.ஆர். பரிசோதனைகளில் மாத்திரமே தங்கியிருக்கும் நிலை காணப்படுகின்றது.
அதனால் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.
தொற்றைக் கண்டறிவதற்கான பரிசோதனைகளின் நிலை தொடர்பில் தொற்றுநோய்த்தடுப்புப் பிரிவு நாளாந்தம் அறிக்கையிட வேண்டும். ஆனால் அவ்வாறு அறிக்கையிடப்படாதமையால், தொற்றின் பாரதூரத்தன்மையை மதிப்பீடு செய்வது கடினமானதாக மாறியுள்ளது.
அதேபோன்று இந்தத் தகவல்களை முறையாகப் பேணுவதற்குரிய செயற்றிட்டம் எதுவும் வகுக்கப்படாமை குறைபாடாகக் காணப்படுகின்றது. என்றார். (த4)



# திட்டமிடல் இல்லாதமையே மக்களுக்கே பெரும்பாதிப்பு

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 16
கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த் சிறந்த திட்டமிடலை அரசு மேற்கொள்ளாத காரணத்தால், மக்களின் வாழ்க்கை நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியுள்ளது. இது தொடர்பில் கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளதாவது,
கொரோனாத் தொற்றுக் காரணமாக [illegible]டுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் தற்போது அத்தியாவசிய உணவு மற்றும் மருந்துகளைப் பெற முடியாது உள்ளனர்.
அதே நேரத்தில் நாளாந்த ஊதியம் பெறும் குடும்பங்கள் பல இன்னல்களைச் சந்தித்துள்ளனர். வேலைக்குச் செல்லும் ஊழியர்களுக்கும் பாதுகாப்பான போக்குவரத்துச் சேவை இல்லை.
என[illegible] மாதத்துக்குரிய சம்பளம் வழங்கப்படும் வரை. அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றார். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா நைனாமடுப்பகுதியில் ஆக்கிரமிக்க தயாராகின்றது தொல்பொருள் திணைக்களம்!

வவுனியா, மே 16

**வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நைனாமடு கிராமசேவகர் பிரிவின் கோடாலிபறிச்சான் காட்டுப்பகுதியில் விகாரையுடன் தொடர்புடைய இடிபாடுகள் உள்ளன என்று தெரிவித்து வவுனியா பிராந்திய தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளால் அண்மையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

நைனாமடுவில் அமைந்துள்ள ஒதுக்கப்பட்ட காட்டுப்பகுதியில் சுமார் 8 பாறைக்கோபுரங்களைக் கொண்ட ஒரு கட்டிட அமைப்பு, பாறைத் துருவ அடித்தளத்தைக் கொண்ட அமைப்புகள், 5 மீட்டர் உயரமுள்ள தூண் ஆகிய இடிபாடுகளை பார்வையிட்ட இராணுவத்தினர் இது தொடர்பாக தொல்பொருள் திணைக்களத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

அதற்கமைய வவுனியா மாவட்ட தொல்பொருள் திணைக்கள் அதிகாரிகளால் குறித்த பகுதி அண்மையில் ஆய்வுசெய்யப்பட்டுள்ளது. எனினும் இது தொடர்பாக குறித்த பகுதியின் கிராம அலுவலருக்கோ அல்லது கிராம மக்களுக்கோ எந்தத் தகவலும் தெரியப்படுத்தப்படவில்லை.

அங்கு பௌத்த விகாரையுடன் தொடர்புடைய தொல்பொருள் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளதுடன், குறித்த பகுதி வர்த்தமானி அறிவுப்புச்செய்யப்பட்டு, தொல்பொருள் அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில் ஆக்கிரமிப்பை ஏற்படுத்தியுள்ள தொல்பொருட் திணைக்களம் தமிழ்மக்களின் பூர்வீக பிரதேசமான நைனாமடுவில் மீண்டும் ஒரு ஆக்கிரமிப்பினை முன்னெடுப்பதற்கு தயாராகிவருகின்றமை மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (ம-110)

## இனப்படுகொலை இடம்பெற்றமைக்கு சட்ட ரீதியான ஆதாரம் ஏதுமில்லை

### இப்படிக் கூறுகின்றார் சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், மே 16

'இலங்கையில் இனப்படுகொலை நடந்தது என்பதை சட்டரீதியாக நிரூபிக்கப் போதுமான ஆதாரங்கள் இல்லை. இனப்படுகொலை என்ற சொல்லை அரசியல்வாதிகளும், சட்டத்தரணிகளும் பாவிக்க வேண்டாம் என்றே முன்னாள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் குறிப்பிட்டுள்ளார். வடக்கு மாகாண சபையால் இனப்படுகொலை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது எனக் கூறப்பட்டாலும், அதில் உண்மையில்லை இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தனியார் வானொலி ஒன்றுக்கு அவர் நேற்று வழங்கிய செவ்வியில் மேலும் தெரிவித்ததாவது:

'இலங்கையில் இனப்படுகொலை நடந்தது. ஆனால், குற்றவியல் நீதிமன்றத்தில் நிரூபிக்கப் பேசுகின்றோமா, அரசியல் சமூக தளத்தில் பேசுகின்றோமா என்பது முக்கியமானது.

குற்றவியல் நீதிமன்றத்தில் நிரூபிக்கும் விடயத்தில் கவனமாகப் பேச வேண்டும். அதை நிரூபிக்கப் போதுமான ஆதாரங்களில்லை என்பதே எனது நிலைப்பாடு.

அண்மையில் இணையவழி கலந்துரையாடல் நடந்தது. அதில் விக்னேஸ்வரன், சம்பந்தன் போன்றவர்களும் கலந்துகொண்டனர். அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட நவநீதம்பிள்ளையிடம் 3 கேள்விகள் கேட்கப்பட்டது. அதில் 2 கேள்விகள் இனப்படுகொலை தொடர்பானவை.

இனப்படுகொலை தொடர்பான முதலாவது சர்வதேச நீதிமன்ற விசாரணையுடன் தொடர்புபட்டவர் என்ற அடிப்படையில் நவநீதம்பிள்ளை ஒரு விடயத்தைக் குறிப்பிட்டார். அந்தச் சொல்லைக் கவனமாகப் பாவிக்க வேண்டும். அது சட்ட வியாக்கியானமான சொல். சட்டத்தரணிகள், அரசியல்வாதிகள் அந்தச் சொல்லைப் பாவிக்க வேண்டாம்; ஊடகவியலாளர்கள் அதைப் பாவிப்பார்கள் என்று கூறினார்.

வடக்கு மாகாண சபையில் இனப்படுகொலை தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றியதாகக் கூறுகின்றார்கள். அதில், கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை என்றே கூறப்பட்டுள்ளது. கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை சர்வதேச குற்றமாக இன்னும் இணைக்கப்படவில்லை என்றும், அதைக் குற்றமாக இணைக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்கள். அதாவது இனப்படுகொலை நடக்கவில்லை என்றே அவர்கள் கூறுகிறார்கள்.

அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவி ஒரு காலத்தில் எனக்கு வழங்கப்பட்டால் அதைப் பொறுப்பேற்கத் தயாராக இருக்கின்றேன். நான் கட்சித் தலைமையை ஏற்கும் நோக்கத்துடன் அரசியலுக்கு வரவில்லை. ஒரு அரசியல் தீர்வு முயற்சிக்காகத்தான் அரசியலுக்கு வந்தேன். ஆனால், பின்னாளில் பல பொறுப்புக்கள் எனக்கு வந்தன. அந்தப் பொறுப்புக்களை நான் தட்டிக்கழிக்கவில்லை. அதேபோல் கட்சித் தலைமையை ஏற்கும் நிலை வந்தால் அதை ஏற்பேன் என்றார். (ம-22)

## பொலிஸாரின் பங்குபற்றலுடன் காரைநகரில் 'கூழ் விருந்து'!

யாழ்ப்பாணம், மே 16

காரைநகரில் கூழ் தயாரித்து விருந்து பசாரத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் சிலர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் தனிமைப்படுத்தப்பட்டனர். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

நாடெங்கிலும் பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. மருத்துவத்தேவைக்கும் ஏனைய அத்தியாவதியத் தேவையையும் தவிர வேறெந்தத் தேவைக்கும் மக்கள் வெளியே வரக்கூடாது என்று இறுக்கமான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் இரு பொலிஸாரின் பங்குபற்றலுடன் இந்த கூழ் விருந்து பசாரம் இடம்பெற்றுள்ளது. தகவல் அறிந்துவந்த சுகாதாரத் துறையினர் அதில் கலந்துகொண்டவர்கள் அனைவரையும் தனிமைப்படுத்தினர். (ம)

## மரண அறிவித்தல்

பிறப்பு 24 . 06 . 1960



இறப்பு 15 . 05 . 2021

### திருமதி கமலகுமாரி தவபாலரத்தினம்

யாழ்ப்பாணம் சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலகுமாரி தவபாலரத்தினம் அவர்கள் நேற்று (15.05.2021) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பர் வள்ளியாச்சி தம்பதியரின் அன்பு மகளும், கந்தர் குஞ்சரம் தம்பதியரின் மருமகளும், தவபாலரத்தினம் (ஓய்வுபெற்ற ஊழியர் - இலங்கை வங்கி) இன் அன்பு மனைவியும், அபிநயா (மாணவி-தொழில்நுட்ப கல்லூரி) வின் அன்பு தாயும், புவனேஸ்வரி, செல்வரட்ணம் (பிரான்ஸ்), திரவியம், திலோண்மணி, காலஞ்சென்ற விஜயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்லையா, ராணியம்மா, நாகேஸ்வரி, தவமணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2021) ஞாயிற்றுக்கிழமை காலை கோம்பயன்மணல் இந்து மயானத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
கணவர்
077 111 0742

## நேற்றும் 2,386 பேருக்கு கொரோனாத் தொற்று

இலங்கையில் நேற்றும் 2 ஆயிரத்து 386 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.


இதன்படி கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 40 ஆயிரத்து 471ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாத் தொற்றிலிருந்து ஒரு இலட்சத்து 17 ஆயிரத்து 220 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 22 ஆயிரத்து 330 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை வீடுகளில் நினைவுகூருவோம்!

## மாவை சேனாதிராசா அழைப்பு



**யாழ்ப்பாணம், மே 16**

**தமிழர் தேசமும் மக்களும் அழிக்கப்பட்ட வரலாறுகளையெல்லாம் தாங்கி நிற்கின்ற முள்ளிவாய்க்கால் நினைவிடத்தை அரசு அழித்தாலும் நாளைமறுதினம் மே 18 அன்று முள்ளிவாய்க்கால் படுகொலை'யை நாம் வாழும் இடங்களிலும், குடியிருக்கும் குடில்களிலும் நினைவுகூருவோம் இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் துணைத்தலைவருமான மாவை சோ.சேனாதிராசா அழைப்பு விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தங்கள் உறவுகளைப் பறிகொடுத்த மக்கள் அவர்களை நினைவுகூரவும், அஞ்சலி செய்யவும், ஆத்மசாந்திக்கான ஈமக்கடன்களில் ஈடுபடவும் உள்ள உரிமை, பண்பாடு, நாகரிகம் இங்கையில் மறுக்கப்படுகின்றது.

அந்த மக்கள் அஞ்சலிசெய்ய, கண்ணீர் விட்டழுது ஆறுதல் பெற ஆன்மக் கடனாற்றவுள்ள நினைவிடங்களும், சின்னங்களும் அழிக்கப்படுகின்றன. தமிழ் மக்களின் ஆன்மத்தையே அழிக்கும் செயற்பாடே கடந்த 12ஆம் திகதி நள்ளிரவில் இராணுவம் சூழ்ந்திருக்க முள்ளிவாய்க்கால் நினைவிடத்திலும் நடந்தேறியிருக்கின்றது.

அந்த நினைவிடத்தில் மே 18ஆம் நாள் புதிய நினைவுக்கல்லை நிலைநிறுத்தவும், அந்த நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்ச்சிகள் இடம்பெறவும் ஒழுங்கமைப்புக்கள் இடம்பெற்றன. இந்தநிலையில், புதிய நினைவுக்கல்லும் அங்கிருந்து இராணுவம் சூழ்ந்திருக்க அகற்றப்பட்டிருக்கின்றது. அந்த நினைவுக்கல் இப்போது எங்கே? இலங்கை அரசு இத்தனைக்கும் பொறுப்புக்கூறியே ஆக வேண்டும்.

தமிழர் தேசமும் மக்களும் அழிக்கப்பட்ட வரலாறுகளையெல்லாம் தாங்கி நிற்கின்றது முள்ளிவாய்க்கால் நினைவிடம். இத்தகைய வரலாற்றைப் பிரதிபலிக்கும் முள்ளிவாய்க்கால் அத்திபாரத்திலிருந்துதான் தமிழ்த் தேசிய இனம் விடுதலை வரலாற்றைப் படைக்கப் போகின்றது. அந்த வரலாற்றுத் தீர்மானத்தை எதிர்வரும் மே 18 அன்று நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிறைவேற்றுவோம். இலங்கைத் தமிழர் பிரச்சினை இன்று சர்வதேச சமயப்பட்டிருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கொரோனா பரவலைத் தடுப்பதற்கும், உயிர்களைக் காக்கவும் மருத்துவ நிபுணர்கள் மற்றும் உலக சுகாதார நிறுவனத்தின் கட்டுப்பாடுகளை ஏற்று நாமே நம்மைப் பாதுகாக்கும் வழிவகைகளைப் பின்பற்ற வேண்டிய நிலையில் உள்ளோம். எனவே, மே 18 அன்று இதுவரை அடைந்த அவலங்கள், துயரங்களை நெஞ்சில் இருத்தி இலட்சியத் தாகத்தை இதயத்தில் நிறைத்து வாழும் இடங்களிலும், குடியிருக்கும் குடில்களிலும் எமது உறவுகளை நினைவுகூர்ந்து மாலை 6 மணிக்கு மணி ஒலி எழுப்பிச் சுடரேற்றி விளக்கேற்றி திடசங்கற்பத்துடன் முள்ளிவாய்க்கால் நினைவலைகளைப் பாரெல்லாம் பரப்பி நிற்போம் என அழைப்பு விடுக்கின்றோம் என்றுள்ளது. (ம-ஒ.22,26)

# கொரோனா பெருந்தொற்று திருமலையில் தாண்டவம்!

திருகோணமலை, மே 16

நேற்றுமுன்தினம் தொடக்கம் நேற்று வரையான 24 மணிநேரத்துக்குள் திருகோணமலையில் மூன்று பேர் கொரோனாப் பெருந்தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாண சுகாதார திணைக்களம் நேற்றுக் காலை 10 மணியளவில் வெளியிட்ட அறிக்கையொன்றிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் பதிவாகிய மூன்று மரணங்களும், கிண்ணியா, மூதூர் மற்றும் திருகோணமலை ஆகிய சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளிலேயே இடம்பெற்றுள்ளன. அத்துடன் தொற்றுக்களின் எண்ணிக்கையும் திருகோணமலையில் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

புறக்கோட்டையிலுள்ள

# மொ.வி.நிலையங்கள் இன்று இயங்கும்

கொழும்பு, மே 16

கொழும்பு புறக்கோட்டையிலுள்ள மொத்த விற்பனை நிலையங்கள், பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு இலகுவாக இன்று முதல் மீளத் திறக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியிலுள்ள மொத்த விற்பனையாளர்கள் இன்று முதல் பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பிரதேச செயலகங்களில் இதற்கான அனுமதிப்பத்திரங்களை பெற்று, புறக்கோட்டை மொத்த விற்பனை நிலையத்துக்கு வரமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# கைவிடப்பட்ட நிலையில் அலைபேசிகள் மீட்பு

## பொன்னாலையில் மர்மம்

யாழ்ப்பாணம், மே 16

பொன்னாலையில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட இரண்டு ரப் மற்றும் நான்கு அலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன. நேற்று பிற்பகல் 5.30 மணியளவில் இளைஞர்கள் சிலரால் மேற்படி பொருள்கள் மீட்கப்பட்டன.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்துக்குச் செல்லும் பிரதான வீதியில், பொன்னாலை தெற்கு மங்களேஸ்வரன் வீதிக்கு திரும்பும் இடத்தில், நீர்க்குழாய் திருகி அமைக்கப்பட்ட மூடி இல்லாத சிமெந்துக் கட்டுக்குள் பொலித்தீன் பை ஒன்றுக்குள் வைத்து கட்டப்பட்ட நிலையில் இவை மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வருகைதந்த பொலிஸார் அவற்றைப் பெற்றுச் சென்றனர். இவை யாருடையவை? யார் கொண்டு வந்து வைத்தார்கள்? என்பது தொடா்பாக பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-26)



INDIVIDUAL ENGLISH CLASSES
GRAMMAR with SPOKEN PRACTICE
K.GANESH B.A (Pera)
GCE O/L - A/L பட்டதாரிகள்
(Including English Medium)
தொழில்புரிவோர் அனைவருக்கும்
யாழ் இந்து அருகாமை
யாழ்ப்பாணம் 077 766 8725

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 16 - 04 - 1945

விண்ணில் 17 - 04 - 2021



அமரர் திருமதி

## பாலசிங்கம் கெங்காதேவி

எமக்கெல்லாம் உயிர் கொடுத்து எம்மை பெற்று வளர்த்து கண்ணின் மணிகளென பேணிப் பாதுகாத்து இந்நிலை எய்யக் கட்டிக்காத்த எம் அன்புத்தாய் எங்கள் அன்பு மாமி, அன்பு அம்மம்மா, அன்பு அப்பம்மா **அமரர் திருமதி பாலசிங்கம் கெங்காதேவி** அவர்களின் மரணச் செய்தி கேட்டு கணத்தில் விரைந்து வந்து சகல விதத்திலும் உதவியவர்களுக்கும், நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், ஈமக்கிரியையில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் உள்நாட்டில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை வெளியிட்டவர்களுக்கும், மலர்மாலைகள், மலர்வளையங்கள், பதாகைகள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், நாங்கள் துயரில் இருந்த போது தாகத்தையும், பசியையும் போக்கியோருக்கும், மற்றும் பல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும், எமது குடும்பத்தின் சார்பாக மனப்பூர்வமான நன்றிகளையும் வணக்கங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**தற்சமயம் நாட்டில் நிலவும் இக்கட்டான சூழ்நிலை காரணமாக** அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரையும் 17/05/2021 திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைக்கும், மதியபோஷன விருந்துக்கும் அழைக்க முடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகிறோம். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு எமது குடும்பத்தின் சார்பில் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

கட்டுடை,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org